# பொய்கையார்

★

தி ம... ப்ரிமியர் கம்பெனி - சென்னை 1.

O-,1GPKw
N55
164396

# பொய்கையார்

G. ஸாமு விக்டர், B.A., L.T.,
தலைமை ஆசிரியர்
ஸெய்ன்ட் ஜான்ஸ் உயர்தரப்பள்ளி, பாளையங்கோட்டை
and
வித்வான் மோசஸ் பொன்னையா, B.A.,
தமிழாசிரியர்
ஸெய்ன்ட் ஜான்ஸ் கல்லூரி, பாளையங்கோட்டை

பதிப்பாளர்:
மதராஸ் பிரீமியர் கம்பெனி,
2/21, பஸ்ட் லைன் பீச், சென்னை-1

பதிப்புரிமை] 1955 [விலை அணா 12

| | | |
|---|---|---|
| First Edition | Nov. | 1951 |
| Revised Edition | Sep. | 1954 |
| Re-print | May | 1955 |

Approved by the Madras Text-Book Committee
for class use
(*vide* Fort St. George Gazette Supplement to Part I-B,
Page 29, dated 4th May 1955)

Thompson & Co., Ltd., Madras.

# முன்னுரை

தமிழ்மொழியின் பொற்காலஞ் சங்க காலமெனலாம். அக்காலத்தில் உறைந்த தமிழ்ப் புலவரே தமிழ் மொழியின் சொல்வளத்தையும், பொருள்வளத்தையும் பெருக்கினர். தமிழ்த்தாயின் திரு வணிகளிற் சிறந்தனவெல்லாம் அவராற் செய்யப்பட்டனவேயாகும். அவர் சூட்டிய அணிகள் என்றும் நம் அன்னையின் திருமேனியில் அழகுடன் விளங்குகின்றன.

'பொய்கையார்' என்னும் செந்நாப் புலவரும் அக்காலத்தில் வாழ்ந்தவரேயாவர். சேரன் அவையில் நெடுங்காலம் வாழ்ந்த அவர் சோழன் மேல் 'களவழி' பாடியுள்ளார். கோக்கோதை மார்பனது கொடைச் சிறப்பையும், சேர நாட்டின் வளத்தையும், புகழ்ந்து பாடியுள்ள அவரது செய்யுட்கள் புறநானூற்றில் காணபபடுகின்றன. அவற்றைத் தவிர யாப்பிலக்கண மேற்கோள்களாகவும் அவர் பெயரால் சில பாடல்கள் யாப்பருங்கல விருத்தி உரையாசிரியரால் எடுத்தாளப் பட்டிருக்கின்றன. இவைகளே இச்சிறு நூல் எழ ஆதாரமாக வமைந்தன.

வீரமுடைமை, பெரியோரிடம் பணிவுடன் நடந்து கொள்ளுதல், மான வாழ்க்கை, அருளுடைமை, சமூக சேவை முதலிய சிறந்த பண்பாடுகளைக் கற்போர் உள்ளத்திற் பதியவைக்கும் ஆற்றல் மிக்க நிகழ்ச்சிகள் இந்நூலில் ஆங்காங்கே அமைந்துள்ளன.

இனிமையும், எளிமையும் உடையதே சிறந்த மொழி நடை என்பது அறிஞர் முடிவு. இந்நூல் முழுவதும் அத்தகைய நடையில் அமைந்துள்ளது என்பது இதனை ஒரு முறை படிப்போருக்குப் புலப்படும். எனவே, இந்நூல் மாணவருலகிற்குப பெரிதும் பயனளிக்கும் என்பது எம் துணிவு.

ஆக்கியோர்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பிறப்பும் இளமைப் பருவமும் | ... | 1 |
| 2. | கணைக்காலனுக்குக் கல்வி புகட்டியமை | ... | 6 |
| 3. | செங்கணனின் செருக்கு | ... | 19 |
| 4. | பொய்கையார் பதில் | ... | 27 |
| 6. | கழுமலப் போர் | ... | 37 |
| 7. | சிறைக் காட்சி | ... | 44 |
| 8. | பொய்கையாரின் வெற்றி | ... | 55 |
| 9. | சிறையிற் சேரமான் | ... | 61 |
| 10. | உறையூரில் இன்ப விழா | ... | 70 |
| 11. | இறுதி நாட்கள் | ... | 71 |
| 12. | பயிற்சிகள் | ... | 86 |


தி. தியாகராசன்.

9-11-61.

தாயெழில் தமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை,

ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற

தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந் தென்றன் செவியில் வந்து

பாயுநாள் எந்த நாளோ?
யாரிதைப் பகர்வார் இங்கே?

—பாரதி தாசன்

# பொய்கையார்

## 1. பிறப்பும், இளமைப்பருவமும்

**தமிழகம்**

பூமகளின் திலகமென விளங்குவது தமிழகம். இஃது 'இயற்கை வனப்பு மிக்கு, வளம்பெற்று விளங்குவது. இதன் வடக்கு எல்லே வேங்கட மாமலே என்றும் பிற மூன்று திசைகளிலும் கடல்களே எல்லையாக வுள்ளன வென்றுங் கூறுவர். அறிஞர் மிகப் பழங்காலத்திலிருந்தே இங்கு உரிமையாட்சி நடந்து வந்தது. இப் பரத கண்டம் முழுவதையும் ஆண்ட அசோக சக்கரவர்த்தியும், இத்தமிழகத்தின் தனி உரிமையைச் சிதைக்கவில்லே. சேரர், சோழர், பாண்டியர் 'என்னும் முடியுடை மூவேந்தரும் தமிழகத்தைப் பகுத்து ஆண்ட அரசர்களாவர். இம் மூவர் நாடுகளும் தலேகீழாக அமைந்த ஆய்த எழுத்தே போல் அமைந்திருந்தன.

**சேர நாடு**

தமிழகத்தின் மேற்குப் பகுதி சேர நாடாகும். அது மலேகள் நிறைந்து விளங்குவது ஆதலின் அதனே 'மலே நாடு' எனவும், அந்நாட்டு மன்னனே 'மலேயன்' 'பொருப்பன்' எனவும் ஆன்றேர் கூறுவர். அது தமிழகத்தின் மேற்குக்கரையில் அமைந்துள்ளது பற்றி அதனேக் 'குட புலம்' எனக் குறிப்பிடுவதும் உண்டு. ஏலம், கிராம்பு, இலவங்கம், சந்தனம் முதலியன அங்குள்ள மலேகளிற்

கிடைக்கும் வாசனைப் பொருள்கள். காடுகளில் யானைகள் மிக்கு வாழ்கின்றன; ஆதலின், அங்கு யானைத் தந்தங்கள் இன்றும் அளவின்றிக் கிடைக்கின்றன. இவைகளை யன்றி, அந்நாட்டு மயிலிறகும், குரங்கினங்களும் உலகப் பிரசித்தி பெற்றவை.

**தொண்டித் துறை**

மிகப் பழங்காலத்திலிருந்தே அந்நாட்டின் மேற்குக் கரையில் இருந்த தொண்டி என்னும் கடற்றுறைப் பட்டினம் மிகப பிரசித்தி பெற்று விளங்கிற்று. அஃது அந்நாட்டின் பண்ட சாலையாகவும், முக்கியத் துறைமுக மாகவும் இருந்தது. எகிப்து, கிரீஸ், எபிரேயம், இத் தாலி முதலிய மேலை நாட்டார் தம் நாட்டிலிருந்து, பொன்னையும், பிற பொருள்களையும் கலங்களிற் கொணர்ந்து கொடுத்து, அவற்றிற்குப் பதிலாக இந்நாட்டு வாசனைத் திரவியங்களையும், மயிலிறகு, குரங்கு முதலியன வற்றையும் பெற்றுச் சென்றனர். பண்டு தொட்டுச் சேர நாட்டின் தலைநகரம் 'வஞ்சி' யாக இருந்தபோதிலும், தொண்டித் துறையிலே தான் மக்கள் அதிகமாக வாழ்ந்த னர். தமிழ் நாட்டுப் பல்வகை மக்களும் அங்குக் கூடி வாழ்ந்தனர். வணிகரினமே அங்கு வாழ்ந்த மக்களிற் பெரும் பகுதியினர் ஆவர். வாணிபங் கருதி அங்கு வந்த பிறமொழியாளரும் ஆங்காங்கே அந்நகரிற் குடி யிருந்தனர்.

**பொய்கையாரின் முன்னோர்**

( தொண்டித் துறையில் ஒரு பகுதியில் அந்தணரும் வாழ்ந்து வந்தனர். ஏனையோரினும் அவர்கள் மிகச் சிலரே ஆவர். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்

தல், ஈதல், ஏற்றல் என்னும் அறு தொழிலையும் குறை வின்றி நடத்துவதே அவர்கள் தொழில். மக்களிடம் அன்புடனும், அருளுடனும் நடந்து கொள்வதே அவர் தம் வாழ்க்கையின் குறிக்கோள்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்(று) எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்(டு)ஒழுக லான்"

என்னும் வள்ளுவர் வாக்குக்கு இலக்காக வாழ்ந்த அவர் களை, உலகப் பற்றை ஒருவாறு துறந்தவர்கள் எனக் கூறுவதும் மிகையாகாது. எனவே, பிற மக்கள் தம் ஈகை வன்மையாலும், அன்பு நிறைந்த மொழிகளாலும், அவர்களை நன்கு உபசரித்து வந்தனர். அவர்களும், இலக்கியம், இலக்கணம், தருக்கம், சோதிடம், கணிதம் முதலிய கலைகளைப் பிழையறக் கற்று அறிவுக் களஞ்சியங் களாக விளங்கினர். அத்தகைய சிறந்த குடியில் பேரறிஞர் ஒருவரின் பிள்ளையாகப் பிறந்தார் பொய்கை யார்;

## இளமைப் பருவம்

தம் குலமுறைக்கேற்ப அவர் தம் பெற்றோர் வயது வந்ததும் அவரைத் திண்ணைப்பள்ளிக்கு அனுப்பினர். ஆசிரியர், தமிழ் மொழியைப் பிழையற எழுதவும், பேசவும் கற்றுக்கொடுத்ததுடன் கணித அறிவும்

---

[1] "கள்நா றும்மே கானலந் தொண்டி
அஃதெம் மூரே"...... புறம். 48.

என, இவ்வாசிரியரே கூறியுள்ளமையின், இவரூர் தொண்டி எனக் கூறினோம். இவரூரா 'பொய்கை' என்பாரும் உளர். புலவர் தாமே தம்மூர் தொண்டி என்று கூறி யுள்ளமையின் அது பொருந் தாது.

புகட்டினர். அக்காலத்தில் திண்ணைப் பள்ளிகளிற் கற்பிக் கப்பட்ட கலைகள் இவ்விரண்டுமேயாகும். ஆதலாலன்றோ, "எண்ணெழுத் திகழேல்" "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்னும் பழமொழிகள் எழுந்தன! இத்திண்ணைப் பள்ளி ஆசிரியர்களைக் 'கணக்காயர்' எனக் கூறுவது வழக்கம். நெடுங் கணக்கை (தமிழ் எழுத்துக்களை) அறிவுறுத்துவதால், அவர்க்கு இப்பெயர் அமைந்தது போலும்.

**கலை பயிலல்**

திண்ணைப் பள்ளியிற் பயின்ற பின்னர், பொய்கையார் தம் தந்தையிடமே கல்வி கற்கத் தொடங்கினர். அக்காலத்தில் கலைபயிலும் முறையைப் பாடங்கேட்டல் எனக் கூறுவது வழக்கம். எழுது கருவிகளும், அச்சுப் பொறியும் எண்ணற்ற நூல்களைக் குறைந்த கால அளவில் இக்காலத்தில் வெளிப்படுத்தி விடுகின்றன. ஆனால், ஏடும், எழுத்தாணியுமே அக்காலத்து எழுது கருவிகள். எனவே, ஏட்டு ரூபத்தில் மிகக் குறைந்த நூல்களே வெளிப்பட்டிருந்தன. இக் காரணத்தால் ஆசிரியர்கள் நூல்களை மனப்பாடஞ் செய்வதும், மாணவரிடம் (ஒப்புவிப்பதும்) பாடஞ் சொல்வதும், நாம் வியக்கத்தக்க முறையிலேயே நடந்து வந்தன.

பொய்கையாரின் தந்தை தம் மகனுக்குத் தமிழ் இலக்கியங்களையும், இலக்கண நூல்களையும் கற்பித்தார். இவற்றையன்றிக் கணிதம், வானநூல், சோதிடம் முதலிய கலைகளிலும் தாம் அறிந்தவற்றைக் கற்பித்தார். இக்கலைகளில் பொய்கையாருக்கு விருப்பம் அதிகம்.

தந்தையிடம் கற்ற கலைகளை அவர் பன்மடங்கு விருத்தி செய்து கொண்டார். கருத்துக்களைச் செய்யுளாக அமைத்து வெளியிடும் திறமை அவருக்கு இளமையிலேயே இருந்தது. எனவே, அவர் இளமையிலேயே தம் தந்தையும் வியக்கும் வண்ணம் சிறந்த செய்யுட்கள் இயற்றிக் காட்டி மகிழ்வித்தார். அக்காலத்தில் தொண்டித் துறையில் வாழ்ந்த அறிஞர் அனைவரும் அவரை இளைஞர் என இகழ்ந்துரையாது, பெரும் புலவரெனக் கூறிப் புகழ்ந்தனர். நாட் செல்லச் செல்லத் தமிழகம் முழுவதும் அவரது புகழ் பரவிற்று.

## 2. கணைக்காலனுக்குக் கல்வி புகட்டியமை

### சேரர் தலைநகர்

நாம் அறிந்துள்ளபடி, பண்டுதொட்டு ‘ வஞ்சி ’ யே சேரரது தலைநகராக விளங்கிற்று. அஃது உள்நாட்டு நகர். வாணிபத்துக்கு அது செதியளிப்பதன்று எனச் “சேரமான் கணைக்காலிரும் பொறை” என்னும் சேரன் அறிந்தான். எனவே, தன் ஆட்சிக்காலத்தில் ‘ தொண் டித் துறை ’ யையே தன் நாட்டின் தலைநகராகக் கொண் டான்.

### சேரரது குடிப்பெருமை

தமிழகத்து மலைப்பாகம் சேரரது ஆட்சிக்குள் அடங் கியது. அவர்கள் ஆட்சித் தொடக்கக் காலத்தை வரை யறுத்துக் கூறுவது எளிதன்று. அந்நாட்டிற் பிறந்து வளர்ந்த ஐயனரிதனர் என்னும் இலக்கண ஆசிரியர், தமிழ்க்குடி,

“ கல் தோன்றி மண்தோன்ருக் காலத்தே வேலொடு
முன்தோன்றி மூத்த குடி ”

என்று குறிப்பிடுகின்ருர். இதிலிருந்து சேரர் குடி மிகப் பழங்காலத்திலேயே தோன்றியுள்ளது என்பதும், அக் காலத்திலேயே சேரர் தம் அரசியலை அமைத்துக் கொண்டனர் என்பதும் தெரிய வருகின்றன. உரோம ருடனும், கிரேக்கருடனும் நடத்திய வாணிபம் முதலிய சிறப்புக்களும், பெரிப்புளூஸ், தாலமி, முதலிய மேனுட்டுப் பிரயாணிகளின் குறிப்புக்களும் ஒருவாறு அவர்கள்

பழமையை எடுத்துக் கூறுகின்றன. எனவே, எகிப்தியர், கிரேக்கர், உரோமர் தத்தம் நாடுகளிற் சிறப்பாக ஆண்ட காலத்திலேயே அஃதாவது, கிறிஸ்து சகாப்தத்துக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே, சேரர் உரிமையாட்சி நடத்தினர் எனத் துணிந்து கூறலாம். இதுவே ஆராய்ச்சியாளர் முடிவுமாகும்.

**சேரர்தம் குலச் சின்னங்கள்**

விற் கொடியே சேரரது உரிமைக் கொடியாகும். பனந்தாரே அவர்கள் ஆட்சிப் பீடத்தில் அமருங்கால் அணிந்த மாலையாகும். மலைநாட்டில் விற்றொழில் நடாத்திய வீரர் மிகுதி என்பதையும், அங்குப் பனை மரங்கள் மிக்கு விளங்கின என்பதையும் ஒருவாறு இதன் மூலம் அறியலாம்.

**சேர மன்னரின் பெரும்புகழ்**

கங்கைச் சமவெளியில் மிகப் பழங்காலத்தில் பாரதப் போர் நிகழ்ந்ததென்பதை, வடமொழிக் காவியங்களால் அறிகின்றோம். அக்காலத்தில் அவ்விரு திறத்தாருக்கும் பெருஞ்சோறளித்தவன் ஒரு சேரன். அக்கொடைத் தொழிலை அவன் பெயருடன் அடை மொழியாகப் புணர்த்திச், "சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்" எனச் சங்கப் புலவர் அவனைக் குறிக்கின்றனர். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில்,

"ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன் (று) எழுந்த"
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த சேரன்...

என்று இளங்கோவடிகள் அவனைப் புகழ்ந்து கூறுகின்றனர்.

சேரமன்னரின் ஆண்மையை உலகறியச் செய்தவன் “இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்” என்பவனே. அவன் இமயம் வரை சென்று, எதிர்ப்பட்ட அரசரை யெல்லாம் வென்று வாகைசூடி, அம்மலையையே தன் ஆட்சியின் வட வெல்லையாகக் கொண்டான் என்பது அவன் பெயரா லும், சங்கத்துச் சான்றோர் செந்தமிழ்ப் பாக்களாலும் அறியப்படுகிறது. ஆரியரை அலறத் தாக்கி இமயத்தில் விற்பொறித்த நெடுஞ்சேரலாதனது ஆற்றலைப் பாடுங் கால், பரணர் என்னும் புலவர்,

“ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்”

(அகம் 396)

என அணிபெறக் கூறுகின்றார்.

புகார்ப் பதியிற் பிறந்து, மதுரையம்பதியிற் கண வனை யிழந்து, சேரநாடடைந்து தேவருலகஞ் சென்ற கண்ணகியின் வறலாற்றை அறிந்து, அவளுக்குக் கல் லெடுத்தல் தன் கடனெனத் துணிந்தான் செங்குட்டுவன். அதிலும், இமயத்திலிருந்து படிவமமைக்கக் கற்கொணர் தலே தன் தகுதிக்கேற்றதென நினைத்து வடதிசை சென்றான். அக்காலை, அவனை எதிர்த்த வடவரைக் கங்கைக் கரையில் வென்று அவர்தம் முடித்தலையில் அக் கல்லை ஏற்றிக் கொணர்ந்தான் என்பதும் அறியப்படு கின்றது. அச்சேரனும் சேரரது புகழை உலகறியச் செய்தவனாவான்.

சேரமன்னரின் கொடைத்தொழிலையும், ஆண்மை யையும், வீரத்தையும் இளங்கோவடிகளின் காவியமும்

பதிற்றுப்பத்து, புறநானூறு, அகநானூறு முதலிய தொகை நூல்களும் அறிவிக்கின்றன.

**கணைக்காலிரும்பொறை**

அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் அரசர்க்குரிய நாற்குணங்களும் ஒழுங்கமையப்பெற்ற இச் சேரர் குடியில் கணைக்காலிரும்பொறை என்னும் அரசன் தோன்றினன். "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?" என்றார்போல, தன் முன்னோரின் குண நலங்களனைத்தை யும் பெற்று விளங்கினன் அவன். இளமையிலே வாட் போர், வேற்போர், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலிய வித்தைகளை நன்கு கற்றுக் கணைக்காலன், நாடு காவலுக்குத் தகுதியுடன் விளங்கினன். பொன்மலர் மணம் பெற்றாங்கு, இளமையிலேயே இவன் இலக்கிய இலக்கணங் கற்றுக் கவிபாடும் ஆற்றலும் பெற்றிருந் தான் என்றும் அறியப்படுகின்றது.

"கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்னும் பொய்யில் புலவர் குறளின் விழுமிய பொரு ளைத் தன் இயற்கை நுண்ணறிவிலே அறிந்து கொண் டான் போலும்!

கணைக்காலனது அவையிற் சான்றோர் பலர் என் ஞான்றுங் கூடியிருந்தனர். அரசியல் துறையில் அன்ன வர்தஞ் சூழ்ச்சியின் முடிவையே தன் ஆட்சிக்கேற்ற நன்றி பயக்குந் திட்டங்களாகக் கொண்டான் அவன். அத்திட்டங்களை முடித்து வைப்பதிற் கண்ணுங் கருத்து மாகவும் இருந்தான். பெரியோரைத் துணை கொண்டு

நடந்தால் பிழையொன்றும் வராது என்பதே அவன் துணிவு.

“ தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை ”

என்ற வள்ளுவன் உரைப்படி சான்றோர் நட்பே தனக்குப் பெருவலி விளைக்கும் ஆற்றல் வாய்ந்த தென்பதை அவன் இளமையிலிருந்தே நன்கறிந்திருந்தான்.

**தலைநகர் மாற்றம்**

பண்டு தொட்டுச் சேரரது அரசிருக்கையாக அமைந்து விளங்கியது வஞ்சிமா நகரென்றோம். அதனை **வஞ்சைக்களம்** எனவும், [1] **கரூர்** எனவும் கூறுவதுண்டு. அந்நகரருகில் ஆன்பொருநை என்னும் நதி சென்றது. வஞ்சிக் கோட்டையில் அந்நதியின் அலைகள் மோதின. இதனை,

‘வஞ்சிப் புறமதி லலைக்குங், கல்லென் பொருநை’
(புறம். 387.)

என்னும் புறநானூற்று அடியால் அறியலாம். இந்நகர் பல்லாற்றானும் அரசியலுக்கு வசதியளித்தது. எனினும், வாணிப முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக இருந்தது. எனவே, கடற்றுறைப் பட்டினமே நாட்டின் தலைநகராக இருக்கத் தகுந்த தென்னும் கருத்தை மனத்தே கொண்டு, தொண்டித் துறையை அரசிருக்கை யாக்குமாறு அவையத்துச் சான்றோர் அரசனிடம் வேண்டினர்.

[1] திரு. மு. இராகவ ஐயங்காரின் சேரன் செங்குட்டுவன் என்னும் நூலைப் பார்க்கவும்.

அரசனும் அவ்வாறே செய்தான். தன் அரசியற் சுற்றமும், பெருங்குடி வணிகரும், உறையுமாறு தொண்டித் துறை அமைக்கப்பட்டது. கைத்தொழில் வல்லாரும், கலைதெரி புலவரும், அங்குக் குழுமி வாழ்ந்தனர்.

**மூவனுடன் போர்**

தமிழகத்தின் மேல்கரையில் தொண்டித்துறை அமைந்திருந்தது. ஆனால் சேரநாடு மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கிலும் அமைந்து கிடந்தது. இக்காலத்தில் மலையும், கடலும் அரசியலுக்கு உறுதுணை விளைக்கும் ஆற்றலை இழந்தன. அக்காலத்தில் அவற்றால் அரசியல் அல்லலுற்றது எனவே, மலைக்குக் கிழக்கிலுள்ள நாட்டில் தலைநகர் மாற்றங் காரணமாகச் சிறு குழப்பம ஏற்பட்டது.

அங்கிலப் பகுதியை அடுத்து 'மூவன்' என்னும் சிற்றரசன் தன் சிறு நாட்டை ஆண்டு வந்தான். மூவனுக்குச் சேரநாட்டின் கீழ்ப்பகுதியைத் தன் நாட்டிற் சேர்த்துக் கொள்ளும் ஆசை நெடுங்காலமாக இருந்து வந்தது. சமயம் பார்த்துக் கொண்டிருந்த அவன் சேர நாட்டின் உள்நாட்டுக் குழப்பத்தைப் பற்றிக் கேள்விப் பட்டுத் தனக்குள்ளே மகிழ்ந்தான். தூங்குஞ் சிங்கத்தின் மேல் சுண்டெலி குதித்து விளையாடியதே போல், அறிவில்லாச் செயல் செய்ய அவன் முற்பட்டான். தன் சிறு படையைத் திரட்டிச் சேர நாட்டின் மீது படையெடுத்தான்.

இச்செய்தி கணைக்காலன் காதுக்கு எட்டியது. போரின்றி வாடியிருந்த அவன் தோள்கள் பூரித்தன.

கடுகிச்சென்று வீரர்களுக்கு இச்செய்தியை அறிவித்தான். குதித்தெழுந்தார் வீரர்; தேக்கி வைக்கப்பட்டிருந்த நீர் அணையை உடைத்துச் செல்வதேபோல் போர்க்களத்தே புகுந்தனர். கணைக்காலனே நேரிற் போர் வீரரை நடத்திச் சென்றான். அரை நாழிகையில் சேர நாட்டு வீரர் மூவனது சேனையைத் துரத்தி அடித்தனர். மூவன் சேரரது வாளுக்கு இரையாஞன். இறந்தவர் இமையவருலகஞ் செல்ல, இருந்தவர் கானகத்தே ஓடி மறைந்தனர்.

மூவனைக் கொன்று அவன் வீரரைத துரத்தியடித்த பின்னரும், கணைக்காலனின் சினந் தணியவில்லை. தன் வெற்றியின் ஞாபகச் சின்னமாக மூவனின் பற்களைப் பிடுங்கித்தன் கோட்டை வாயிற் கதவில் பதிக்குமாறு ஆணையிட்டான். தான் செய்தது வீரச்செயல் என்று அவன் அன்று எண்ணிக் குதூகலமுங் கொண்டான்.

## வெற்றி விழா

தன் வெற்றியைக் கொண்டாடச் சேரன் நாள் ஒன்றைக் குறிப்பிட்டான். அவையிற் சான்றவர் குழுமினர். வெளியில் வீரர் அணிவகுத்து நின்றனர். தனக்கு வெற்றி கொணர்ந்த வீரரை மகிழ்விப்பது தன் கடன் என அவன் எண்ணிஞன். எனவே, அவன் அவர்களைத் தனித் தனியே கண்டு உரையாடிப் பட்டங்களும், வீரப் பதக்கங்களும் அளித்து மகிழ்வித்தான். பண்டசாலையிலிருந்து அளவற்ற பொருளை அவர்களுக்கு வழங்க ஆணையிட்டான்.

போர்க்களத்தைப் பாடிய பாணருக்குப் பொற்று மரை மலர்களை வெள்ளி நாரால் தொடுத்தளித்து அணியச் செய்தான். பாடினியார் அணிந்திருந்த கந்தைத் துணிகளை அகற்றச் செய்து 'அரவரியன்ன' ஆடைகளை அணிவித்தான். எங்கும் விருந்து நிகழ்ந்தது. கொடிகளும் தோரணங்களும் எங்கும் பறந்தன. தொண்டிமா நகர் அன்று தேவர் பதியெனத் திகழ்ந்தது.

**பொய்கையாரின் கவலை**

சேரன் வெற்றி விழாக் கொண்டாடியதைப் பொய்கையார் கேள்வியுற்றார். தானும் அவன் அவைக்குச் செல்ல விரும்பினார். பொற்றுமரை மலர் மாலை யணிந்து மகிழ அவர் விரும்பவில்லை. அவரை அடிமைப்படுத்தும் அவ்வளவு ஆற்றல் பொருளாசைக்கு ஏது? அரண்மனையில் புலவர் பலரும், அரசியற் சுற்றமும் அமைந்திருக்குங் கால், அவர்கள் முன்னிலையில் அரசன் தன்னைப் புகழ வேண்டும் என்னும் எண்ணமும் அவர் மனத்திடை எழவில்லை. தற்புகழ்ச்சியை நாடித்திரியும் மக்களினத்தினும் அவர் வேறானவர். மனிதனைக் கொன்று, மனிதன் மகிழும் கொடுமையைக் கேள்வியுற்றும், அதை வெற்றியெனக் கொண்டாடும் அறியாமையை அறிந்தும், சுட்டிக் கூறாது சும்மா இருக்க அவரால் முடியவில்லை. உணர்ச்சிக்கு அடிமைபட்டுத் தன் உயிருக்குத் தானே ஊனம் விளைக்கும் மடமையைக் காண அவர் மனஞ் சகிக்கவில்லை. அரசனது அறியாமையை எடுத்துக் கூறி அவனை நன்னெறிப்படுத்த வேண்டும் என்னும் எண்ணத்தால் இழுக்கப்பட்டு அரண்மனை வாயிலை அவர் குறுகினார்.

## அரண்மனையிற் பொய்கையார்

வாயிற காவலன் பொய்கையாரது வரவை அரசனுக்கு அறிவித்தான். 'உடனே அழைத்து வா' எனச் சேரன் காவலனுக்கு ஆணையிட்டான். தன் வெற்றி விழாவிற் பொய்கையார் கலந்து கொள்ளும் விருப்புடன் வருகின்றாரென அவன் எண்ணி உள்ளூற மகிழ்ந்தான்.

வெறறி மண்டபத்திற்குப் பொய்கையார் அழைத்துச் செல்லப்பட்டார். அங்குச் சான்றோர் பலரும், அரசனும், அவனது ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும் நிறைந்திருந்தனர். புலவரைக் கண்ட கணைக்காலன் மரியாதையாக உபசரித்து, அங்குள்ள ஆசனமொன்றில் அமரச் செய்தான். புலவர் ஒன்றும் பேசாது மௌனத்தில் அமர்ந்தார். அவர் முகத்தில சோகங் குடிகொண்டிருந்தது. இக்காட்சி அரசனுக்கு வியப்பை யுண்டு பண்ணியது. எனவே, அவன் புலவரை நோக்கிக், "கற்றுத் தேர்ந்த கலைவாணரே! இவ்வெற்றி விழாவில் முகவாட்டத்துடன் இருப்பதேன்?" என வினவினான். புலவர் தாழ்ந்த குரலில், "வில்லவன் சேயே! உண்மைப் போராட்டத்தில் பலர் தோல்வியுற்று வாடுகின்றனரே, என்னுங் கவலை என் மனத்தே எழுந்தது. அதுவே, என் மௌன நிலைக்குக் காரணம். மன்னிக்க வேண்டும்," எனக் கூறினார். புலவர் கூறிய சொற்களின் செம்பொருள் அரசனுக்கு அப்பொழுது புலப்படவில்லை. வெற்றி விழாவில் தோல்வியை எண்ணிக் கவலும் அவரது மனப்போக்கு அவனுக்கு விபரீதமாகத் தோன்றிற்று. "பித்தனும் புலவனும் மெத்தவு மொப்பர்"

என்னும் கூற்றைப் பொய்கையார் மெய்பித்துக் காட்ட முயலுவதேபோல் அவனுக்குக் கானப்பட்டது. புலவரைத் துரத்தி யடித்து விடுவதே சரியென்று கூட ஒரு கணம் எண்ணியிருக்கலாம். எனினும்,

''வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை''

என்னும் தமிழ்மறைக் கேற்ப, புலவர் பகையை மேற்கொள்ள அவன் ஒருப்படவில்லை. புலவரது உள்ளக் கருத்தை நன்குணர்ந்த பின்னரே எதுவுஞ் செய்தல் பொருந்தும் என அவன் எண்ணினான். எனவே, அவ்வுரையின் கருததை தெரிவிக்குமாறு புலவரை வேண்டினான்.

**உண்மை வெற்றி**

தம் எண்ணங் கைகூடியதை நினைத்துச் சற்று புன் முறுவல் பூததார் புலவர். கேட்போர் வேட்பப் பேசும் ஆற்றல் படைத்த அவருக்குச் சேரன் மனதைக் கவருமாறு பேசத் தெரியும். அவனை வழிப்படுத்தும் நாநலம் தம்மிடம் உண்டு எனவும் அவர் நம்பினார். சொல்லும் கருத்தைக் கோவையாகவும் பிறர் மனத்தில் பதியுமாறுஞ் சொல்லவல்லாரது சொல்லை எவர்தாம் விருப்புடன் கேளார்?

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்''

என்ற குறளுரைப்படி சொல்லின் தன்மையறிந்து மொழியும் ஆற்றல் பெற்ற பொய்கையாரால் ஆகாதது என்ன உள்ளது?

புலவர் தம் இருக்கையை விட்டெழுந்து சில கூறு வாராயினர்.

"அரசே! விலங்கினங்கள் தோன்றிச் சிறிது காலம் வாழ்ந்து பின் மடிகின்றன. புள்ளினங்களும் அவ்வாறே. உடல் நலத்துடன் நெடுநாள் வாழவேண்டு மென்னும் ஒன்றே அவற்றின் இலட்சியம். அதற்காக அவை தம் விரோதிகளைக் கொன்று, வென்று மகிழ்கின்றன. மனித இனம் இவற்றினும் வேறுபட்டது. 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்பது முதுமொழி. அறனும், பொருளும், இன்பமும் ஆற்றுவிக்கும் பகுத்தறிவை இறைவன் நமக்குக் கொடுத்திருக்கின்றான். உயிரினங்களைக் கொன்று மகிழ்தலினும் சிறந்த வெற்றி ஒன்றை அவன் நமக்கு அமைத்துள்ளான். அதுவே, நாம் அடைய வேண்டிய உண்மை வெற்றி. உணர்ச்சி வயப்பட்டு உயிர் வதை செய்து விழாக் கொண்டாடும் நம்மவர் அவ்வெற்றியை அடைவதெங்ஙனம்? என்றும் இல்லை. உயிருக்கும், உடலுக்கும் ஏற்படும் போராட்டத்தில் உடல் உயிரை வென்று விட்டதை எண்ணி விழாக் கொண்டாடுதல் அறிவுடைமையோ? பொறியுணர்ச்சி உடலின் கருவி. பகுத்தறிவு ஒன்றே உயிரின் படை. அதுவே அதன் விளக்கம். பொறியுணர்ச்சியை அறிவு வெல்லுமாயின் அதுவே உண்மை வெற்றியாகும். உயிர்கள் தம்முள் வேற்றுமை இல்லை. உயிர்க்கொலை செய்து மகிழும் மனிதன் உண்மையில் தோல்வியுற்றவனன்றோ?" இவையே அவர் கூறிய அறநெறி.

**கணைக்காலனின் மனமாற்றம்**

கணைக்காலன் இயற்கையில் நுண்ணறிவுடையவன். தன் அறியாமையை உணர்த்திய புலவர் மொழிகளின் உட்கருத்தை ஆழ்ந்து சிந்தித்தான். தான் இதுவரை உண்மையை அறியாத விலங்கே போல் வாழ்ந்த வாழ்வை எண்ணி அகத்தே வருந்தினான். புலவர் இனம் தமிழகத்துக்குச் செய்து வந்துள்ள திருத்தொண்டை ஒரு முறை நோக்கினான். பொய்கையாரின் உள்ளப் பண்பாட்டை எண்ணித் தனக்குள்ளே வியந்தான்.

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப வென்பதஞ் செய்வினை முடித்து......"

(புறம் 27)

என்னும், அடிகளைப் பாடிய முத்துக்கண்ணன் சாத்தன் தன்னைப்போன்ற மதிநலமிழந்த மன்னருக்கே ஆலோசனையாக அவ்வடிகளைக் கூறியுள்ளானென நினைத்தான். பொய்கையார் தன்னை நல்வழிப் படுத்தாவிட்டால், தான் மேலுலக வாழ்வை மறந்து தன் வாழ் நாளை வீணே கழிக்க வேண்டியிருந்திருக்குமே என்ற எண்ணம் அவன் மனத்தில் ஒருகணம் தோன்றி மறைந்தது. சிறிது நேரம் உணர்ச்சியற்றவன் போல் இருந்து விட்டான்.

பின்னர், தன் இருக்கையை விட்டெழுந்து புலன் வல்ல பொய்கையாரிடஞ் சென்று, அவர் பாதமலர்களை வணங்கினான். தனக்கு அறிவுரை கூறிய அவர் அருள் உள்ளத்தை வாழ்த்தினான். தன்னை மாணவனாக ஏற்றுக

கொண்டு அருள் புரியுமாறு, அவரிடம் பணிவுடன் வேண்டி நின்ருன். புலவரும், இளைஞனுயினும், நுண்ணறிவுடன் திகழும் சேரமானின் இயற்கையறிவைப் பலவாறு புகழ்ந்தார். 'கற்றிலனுயினுங் கேட்க' என்றபடி, புலவர்தம் பொன்னுரைகளைக் கேட்டு அவற்றைக் கடைபிடித்து ஒழுகும் ஆர்வம் மிக்கு விளங்கிய சேரனைத் தம் மாணவனுக அவர் ஏற்றுக் கொண்டார்.

# 3. செங்கணனின் செருக்கு

**சோழ வளநாடு**

தமிழகத்தில் வயல் வளம் மிக்கது சோழநாடே யாகும். வான் பொய்ப்பினுந் தான் பொய்யாக் காவிரி யாற்றால் இது வளம் படுத்தப் படுகின்றது. 'சோழ வளநாடு சோறுடைத்து' என்றார் ஔவையாரும். நீல நதியின் நன்கொடையே எகிப்து என்பர் உலகியல் நூலார். அவ்வாறே பொன்னி யாற்றின் நன்கொடையே பொன்னி நாடு எனல் மிகையாகாது.

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே".

என்று தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படும் அடிகள் அந்நாட்டையும் அதன் வளத்தையும் ஒருங்கே புகழு கின்றன. நெல்லுங் கரும்பும் அந்நாட்டின் முக்கிய விளை வுப் பொருள்கள். கமுகுந் தென்னையும் சிற்சில இடங் களிற் பயிராகின்றன. புனல் மிகுந்துள்ளமையின் அதனைப் புனல் நாடு எனவும், தமிழகத்தின் குணபகுதி யாய் அமைந்துள்ளமையின் குணபுலம் எனவும் அதனைக் குறிப்பிடுவதுண்டு.

சோழ நாட்டின் எல்லை, காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டே வந்திருக்கின்றது. எனினும் திருப்பதிக்குத் தெற்கிலும், வெள்ளாற்றின் வடக்கிலும், கரூரின் கிழக்கி லும் அமைந்து, குணகடலைக் கிழக் கெல்லையாகக் கொண்டு விளங்கும் நிலப்பகுதியே சோழ நாடெனச் சிறப்பித்துக் கூறத் தகுந்த தென்று நூல்கள் கூறு கின்றன. இந்நிலவெல்லைக்குள் தற்காலம் திருச்சிராப்

பள்ளி, தஞ்சை என்னும் மாவட்டங்களே அமைந்துள்ளன. இந்நிலப்பரப்பில் அக்காலத்தில் அமைந்துள்ள உறைவிடங்களெல்லாம் பெரும்பாலும் குக்கிராமங்களே. உழுதுண்டு வாழ்வதே ஆண்டுறைந்தவரின் முக்கியத் தொழிலாக அமைந்திருந்தது. அன்னவருக்குப் பயன்படுமாறு காவிரியாற்று நீரை அணைகளால் தேக்கிக் கால்கள் மூலம் காய்ந்த நிலங்களின் ஊடே செல்லச் செய்து உழவர்தம் உழுவலனபுக்குப் பாத்திரரானுர்கள் சோழ அரசர்கள்.

**தலை நகர்கள்**

சோழன் அரசிருக்கையிற் சிறப்பு மிக்கது புகார்த் துறையேயாகும். அது, சோழன் குலமுதலுடன் தோன்றித், திருமிக்கு அவன் புகழுடன் வளர்ந்த பதி. காவிரியாறு கடலுடன் கலக்குமிடத்தில் அஃது அமைந்துள்ளது.

"பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்றுதும்!
வீங்குநீர் வேலி யுலகிற்(கு) அவன் குலத்தோ(டு)
ஓங்கிப் பரந்தொழுக லான்"

என்னும் மூன்று அடிகளால் இளங்கோவடிகள் அதன் புகழைச் சோழன் புகழுடன் பிணித்து விடுகின்ருர். அங்கு வாழ்ந்த மக்கள் எங்களுக்கு நாடு பிடிக்கவில்லை, அரசன் பிடிக்கவில்லை எனக் கூறி வேற்று நாட்டுள் புகார். எனவே, அதனைப் புகார் எனக் கூறுவதும் உண்டு.

அந்நாட்டு விலைபொருள்களெல்லாம் புகார் நகரிலேயே சேமித்து வைக்கப்படும். பின்னர், புலிப்பொறி

யுடன், வேற்று நாடுகளுக்கு அனுப்பப்படும். யவனர் முதலிய வேற்று நாட்டு மக்கள் ஆங்குக் கூடி வாழ்ந்தனர். சேய்மை நாடுகளிலிருந்து வாணிபங் கருதி வரும் மரக் கலங்கள் இன்னலின்றித் துறையை அடைவதற்காக மிகப் பழங்காலத்திலிருந்தே, அங்கு ஒரு கலங் கரை விளக்கம் நிலை பெற்றிருந்தது.

உறையூரும் சோழரது அரசிருக்கையாக அமைந்து விளங்கியது. அதனைக் 'கோழி' என்னும் பெயராற் குறிப்பிடுவதும் உண்டு. வரலாற்றுக் காலங்களுக்கு முன்னர், கோழி ஒன்று, ஒரு யானையை எதிர்த்துப் போரிட்டு வென்றதால் அப்பெயர் உண்டாயிற்று என்பர்.

"முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
புறஞ்சிறை வாரணம்"

என்னும் அடிகள் மேற்கண்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவே எனப் புலனாகின்றது. இந்நகரைச் சுற்றி அழகிய கிடங்கும், மதிலும் அமைந்திருந்தன வென்பர் வரலாற்றாசிரியர்.

**சோழர் மரபு**

தமிழகத்தில் மூவேந்தர் காலத்தொடக்கமும் வரலாற்றாசிரியரால் வரையறுக்க முடியாததே. சேரன் தோன்றி நாடுகாவல் மேற்கொண்ட அஞ்ஞான்றே சோழனும் வளவர் கோனாய்த் திகழ்ந்தான் எனக் கூறல் பொருந்தும். புலிக்கொடியும், ஆத்திமாலையும் அவர் தம் குலச்சின்னம். கிள்ளி, சென்னி என்னும் பெயர்களையும் அவர்கள் கொண்டனர் என்பது அறியப் படுகின்றது. சோழர் சூரியகுலத்தவர் என்பது நூன்மரபு.

தேரூர்ந்து செல்லுங்கால், அறியாது கன்றைச் கொன்ற தன் மகனைக் கொன்று முறைசெய்த மனுச் சோழனே இவர் தம் குலத்தந்தை என்பர். தன்னகம் புக்க புருவின் அல்லல் தீர்ப்பான் வேண்டித் தன் உடலை அரிந்து கொடுத்தும், நிறைவுருமை கண்டு, தானே துலை புகுந்து, தன்னை உண்ணுமாறு பருந்தை வேண்டி நின்ற சிபிச் சர்க்கரவர்த்தியும் சோழ மர பினனே எனப் புலவர் பலர் புகழ்ந்து பாடினர். பாடின அப்புலவருக்குச் சோழர் அள்ளி அள்ளிக் கொடுத்து வந்தனர் என்பதும் அறியப் படுகிறது.

சங்கத்துச் சான்றோர் பலராலும் புகழ்ந்து பாடப் பட்டுள்ள கரிகால் வளவனும் இச்சோழர் குடியிற் றோன்றி அதன் புகழைக் குன்றின்மேல் விளக்கெனச் செய்தவனே யாவன். புலிக்கொடியை மாற்றார் நாட்ட கத்தே பறக்க விடுவதில் அவனுக்கு மட்டில்லா ஆசை. அவன் வடதிசை சென்று ஆரிய மன்னர் பலரையும் வென்று அவரிடம் பல அரிய பொருளைத் திறையெனப் பெற்று வந்தான் எனச் சான்றோர் கூறுகின்றனர்.

**செங்கணான்**

சோழர் குடியில் சங்ககால இறுதியிற் செங்கணான் என்ற அரசன் தோன்றினான். உறையூரே அவன் காலத் தில் அரசிருக்கையாக அமைந்தது. ஆண்மையுடன் போர் பல நடத்து ஆற்றல் அவனிடமிருந்தது. புலவர் பலரைத் தன் அவையில் வைத்து ஆதரித்தான். தன் கருத்துப்

படி அப்புலவர் கூறிஞல் அவன் அதைக் கேட்டு மகிழ்வான். எவராவது புதிய உண்மைகளைக் கண்டு வெளியிட்டால் அவரை எள்ளி நகையாடும் எழில் நலம் பெற்றவன் அவன்.

**சோழன் அவைப்புலவர்**

தமிழன்னையின் தனிப் பணியாளராய்ச் சோழன் அவையை அலங்கரித்தவர் எண்ணிக்கையிற் குறைவற்றவர். அவரெல்லாம், 'அரசன் இருவென இருந்து, சொல்லெனச் சொல்லும்' நன்னெறியாளர். குறிப்பறிந்து மொழிவதில் அமைச்சரும் அவருக்கும் ஈடாகார். அவர்க்கு வேண்டிய பொன்னும், பொருளும், ஆடையும் அணியும் வளவனுல் வாரி இறைக்கப்பட்டன. இவற்றையன்றிச் சிற்சில வேளைகளில் அவர்களைப் புகழ்ந்து கூறி மகிழ்விக்கும் பரிசும் சோழன் அளித்து வந்தான்.

**பொய்கையாரின் புகழ்**

இவ்வாறிருக்குங்கால், சோழன் சேர நாட்டில் வாழ்ந்த பொய்கையாரின் அறிவு மேம்பாட்டைப் பற்றி அறிந்தான். எவ்வாறேனும் அவரைத் தன் அவைக்கு அழைத்து, அவரையும் தன் அவைப் புலவருடன் வாழச் செய்வதென முடிவு செய்தான் எனினும் தன் அவைச் சான்றோரின் எண்ணத்தையும் அறிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணி அவை கூட்டிஞன்; தன் எண்ணத்தையும் அவையினருக்கு அறிவித்தான்.

## செங்கணன் முடிவு

மன்னன் கூறியவற்றைக் கேட்ட அவையில் கூடிய சான்றோர் பலரும் தத்தம் கருத்துக்களைக் கூறினர். பொய்கையார் வர இணங்கார் என்று உணர்ந்த சிலர் அரசனது கருத்துக்கிணங்கியவர் போல் ' அதுவே சரி ' என்றும், ' உடனே செய்யவேண்டும் ' என்றும், போட்டியிட்டுக்கொண்டு கூறினர். வேற்று நாட்டுப் புலவரை வலிய அழைத்தல் தக்கதன்று என்றும் புலவர் ஒருவர் எடுத்துக் கூறினார். அவர்களின் உட்கருத்தை மன்னன் அறிந்தனனேனும் தான் பொய்கையாரை எங்ஙனமேனும் வரவழைக்க விரும்பும் எண்ணத்தை நெகிழவிடவில்லை. பின்னர், தன் அருகில் இருந்த அமைச்சரை நோக்கி அவர் அபிப்பிராயத்தையும் கூறுமாறு கேட்டான்.

## அமைச்சர் உரை

அவ்வமைச்சர் ஆண்டிலும் அறிவிலும் முதிர்ந்தவர். சோழர் மனதினுள் புதைந்து கிடக்கும் உருப்பெறாச் சிந்தைகளையும் அவன் அவைப் புலவர்களது உள்ளப் பண்பாட்டையும் இமைப்பொழுதில் அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றவர். இவற்றுடன், பொய்கையாரின் அறிவுப் பெருக்கத்தையும், சேரன் அவையில் வளரும் கலைகளின் இயல்பையும் ஒருவாறு உணர்ந்தவர். எனவே, பொருள் பொதிந்த பொன்மொழிகள் கூறுவாராயினார். அவை வருமாறு, "அரசே! பொய்கையார் அறிவில்மிக்கார். பொன்னையும் பொருளையும் அவர் மதிப்பவர் அல்லர். அவர் துறவி. சேரனை அவர் தம் உண்மை மாணவனாகக்

கொண்டுள்ளார். அவனும் அவரைத் தன் ஆசிரியராகக் கொண்டு அவர் வழி நின்று ஆட்சி நடத்துகின்றான். தாங்கள் விரும்பும் இக்காரியம் நடைமுறையிற் சாத்தியப் படாது என்பதே எமது எண்ணம்.” இற்சிற்றுரை யுடன் அமைச்சர் முடித்துக் கொண்டார்.

## சோழன் முடிவு

அமைச்சர் உரைகள் மன்னனுக்கு மகிழ்ச்சியைத் தருவனவாக அமையவில்லை. தன் எண்ணத்தை எவ்வா றேனும் நிறைவேற்றுவது என்னும் முடிவுக்கு அவன் வந்தான். எனவே, தான் பொய்கையாரைத் தன் நாட் டிற்கு உடனே வருமாறு அழைக்கப் போவதாகவும், அவர் உண்மையிலேயே அறிவுடையவராக இருந்தால் தன் அழைப்பிற்கிணங்கிச் சோழ நாட்டிற்கு வரத் தவறார் எனவுங் கூறித் தன் இருக்கையை விட்டு எழுந்து அந்தபுரஞ் சென்றான்.

## இராசமாதேவியின் வேண்டுகோள்

அந்தப்புறத்தில் தோழியருடன் இருந்த இராசமா தேவி, செங்கணன் செங்கண்ணனாக வருவதை அறிந்து உண்மையை அறிய முயன்றாள். செங்கணன் சேர நாட்டில் பொய்கையார் என்னும் புலவர் ஒருவர் இருப்ப தாகவும், அவரை எவ்வாறாவது தன் அவைக்குக் கொணரப் போவதாகவுங் கூறினான். இவ்வுரை இராசமா தேவிக்குச் சிறிது மனத்துயரை யுண்டு பண்ணிற்று. புலவரை அழைக்க விரும்பும் தன் கணவர் தகாத முறை யைக் கையாண்டு, அவரிடம் பழிச் சொல்லைப் பெற்று

விடக் கூடாதே என்பதே அவள் மனத்துயருக்குக் காரணம். நிறைமொழி மாந்தரின் வசைமொழி இழைக்கும் இன்னல்களை அவள் அறிவாள். எனவே, புலவரிடம் கண்ணியமாக நடந்துகொள்ளுமாறு தன் கணவனிடம் வேண்டிக்கொண்டாள்.

**சோழன் நிருபம்**

ஆனால், சோழன், தன் பிடிவாதத்திலிருந்து சிறிதும் தளரவில்லை. காலந்தாழ்த்தாது கீழ்க்கண்டவாறு நிருபம் ஒன்றை வரைந்து, தன் தூதுவன் மூலம் பொய்கையாருக்கு அனுப்பினான். அது வருமாறு:—

“ புலவர் போற்றும் பொய்கையாரே !

நீவிர், பல கலைகளிலும் வல்லுநர் என்பதைப் பலர் மூலம் அறிந்து மகிழ்ந்தோம். நீர் எம் அவையை அலங்கரிக்கவேண்டும் என்னும் எண்ணம் எம்மை இந்நிருபத்தை எழுதத் தூண்டுகின்றது. புலிக்கொடியின் புகழைப் பாடி வாழ விழையாத புலவர் எவரும் இலர் என்பது எம்முடிவு. எம் பொன்னையும், பொருளையும் நாடி நீவிர் இதுவரை வராது ஆண்டுறைவது எமக்கு வியப்பைத் தருகின்றது. உடன் வருக.”

இங்ஙனம்,
வள நாட்டு வளவன்,
**செங்கணான்.**

இந்நிருபத்தைப் பெற்ற தூதுவன், குதிரையூர்ந்து மலைநாட்டை நோக்கிச் சென்றான்.

# 4. பொய்கையார் பதில்

## சேரன் அவைக்களம்

சேரமான் அவையின் பொலிவுக்குக் காரணமாக விளங்கியவர் பொய்கையார். அடிக்கடி சபையைக் கூட்டு விப்பதிலும், புலவர் பலர் அரங்கேற்றும் இலக்கிய, இலக்கண நூல்களின் பொருளை உணர்ந்து தன் அறிவைப் பெருக்கிக் கொள்வதிலும் சேரனுக்கு மட்டற்ற ஆசை. இவ்வாறு ஒருநாள் இலக்கிய ஆராயச்சி நடந்து கொண்டிருக்குங்கால், சோழனின் தூதுவன், அவன் அனுப்பிய நிருபத்துடன் சேரன் அரண்மனையைக் குறுகினுன். ஏவலாளர் அந்நிருபத்தைச் சேரனிடஞ் சேர்த்தனர். முகவரியில் பொய்கையாருக்கென்று குறிப்பிட்டிருந்தமையால், சேரமான் அதைப் பொய்கையாரிடங் கொடுத்தான். பொய்கையார் அதன் முகவரியை ஒரு கணம் பார்த்துவிட்டு அதைப் பிரித்துப் படித்தார். புலவரின் முகம் முதலில் வியப்பையும், பின் நகைப்பையும் தோற்றுவித்ததை அரசன் உணர்ந்தான். எனவே, அந்நிருபத்தில் அடங்கிய செய்தியைத் தான் அறியலாமோ வெனப் புலவரிடம் கேட்டான். புலவர், " மயக்கம் " என்னும் ஒரு சொல்லில் விடை பகர்ந்தார். நிருபம் சோழனிடமிருந்து வந்ததை யறிந்த சேரன், புலவர் கூறிய விடையைக் கேட்டவுடனே உண்மையை ஒருவாறு அநுமானித்துக் கொண்டான்.

## புலவர் பதில்

பொய்கையார் சிறிதுந் தாமதியாமல் சோழனுக்குப் பதில் எழுதினுர். அது வருமாறு :

" பொன்னி மன்ன !

நும், நிருபம் கண்டேன். சேரன் அவையிலேயே என் ஆயுள்நாளைக் கழிப்பதெனத் திட்டஞ் செய்துள்ளேன். நீவிற் வியப்புறுவதின் காரணம் எமக்குப் புதிதாகத் தோன்றுகின்றது. பொன்னும், பொருளும் எம்மைக் கவருந் தன்மையவல்ல என்பதை நீவிர் அறிதல் வேண்டும். வளநாடு பொருள் மிக்கதே. எனினும் கலை வளம் மிக்கது என்பதில் எமக்கு ஐயம் உண்டாகின்றது.

இங்ஙனம்,

தமிழன்னையின் திருப்பணியாளன்,

**பொய்கையார்.**

புலவர் இந்நிருபத்தை எழுதி முடிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த சேரன், தான் புலவருக்குச் செய்ய வேண்டிய பணி யாதேனும் உண்டோவென அறிய விரும்பினான். ஆனால், புலவர் தம் கையிலிருந்த நிருபத்தைச் சேரனிடம் கொடுத்து, "இதைச் சோழனிடம் சேர்ப்பதே நீவிர் எமக்குச் செய்ய வேண்டிய பேருதவி", எனக் கூறினார். சேரனும் தன் தூதுவனொருவன் மூலம் அந்நிருபத்தைச் சோணாட்டுக்கு அனுப்பினான். தூதுவன் சென்றபின், அந்நிருபத்திலடங்கிய செய்தியை அவசியமானால் தனக்குங் கூறுமாறு தன் ஆசிரியரிடம் சேரமான் பணிவுடன் வேண்டினான். பொய்கையாரும், சோழன் அனுப்பிய நிருபத்தைச் சேரனிடம் கொடுத்து, அதற்குத் தாம் எழுதிய பதிலையும் தெளிவாகக் கூறினார்.

## சேரமான் கவலை

சேர நாட்டின் புகழுக்குக் காரணராகிய பொய்கையாரைத் தன் நாட்டிற்கு அழைக்கும் சோழனின் செயல் சேரமானுக்குக் கவலையை யுண்டுபண்ணியது. இதைக் காரணமாக வைத்துக் கொண்டு பொய்கையாருக்கும் தனக்கும் அவன் இன்னல் விளைப்பான் என்னும் எண்ணமும் அவன் மனத்தை வாட்டியது. இதையெல்லாம் எண்ணிப் பொய்கையாரது மனம் வாடுமே என்னும் கவலையும் கணைக்காலனுக்கு உண்டாகியது. எனினும் இவற்றையெல்லாம் அடக்கிக்கொண்டு பொய்கையாரிடம் அளவளாவுவானாயினான்.

## பொய்கையாரின் வேண்டுகோள்

கணைக்காலனின் மனத்திலெழுந்த போராட்டத்தைத் தம் அருள் வலியாற் பொய்கையார் அறிந்தார். குடிகளின் வாழ்வைத் தன் வாழ்வாகக் கருதும் சேரமானின் மனம் தன்னலமற்று விளங்கியதையும், அவன் பிறருக்கெனக் கவலுவதையும் உணர்ந்து அகத்தே அவர் மகிழ்ந்தார். தாம் சேரநாட்டில் வாழ்ந்தால் சோழன் சேரநாட்டின்மீது படையெடுத்துச் சேரனுக்கும், அவன் குடிகளுக்கும் துன்பம் விளைப்பான் என்பதை அவர் நன்கு அறிந்தார். எனவே, சிறிது காலம் தாம் வடநாடுகளுக்குச் சென்று தமிழ்நாட்டின் தனிப் பண்புகளைப் பரப்ப வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தார். இதைக் கணைக்காலனிடம் முக மலர்ச்சியுடன் அவர் தெரிவித்தார்.

**கணைக்காலனது பேரன்பு**

இவ்வுரைகள் கணைக்காலன் செவிகளில் விடமெனத தொனித்தன. எனவே, "அருள் வள்ளலே! என் அறியாமையைப் போக்கிய ஒளிப்பிழம்பே! தங்கள் திருவடிகளே எனக்கு ஆறுதலை யளிக்கின்றன. இவ்வரியணையில் அமர்ந்து ஆட்சி செய்ய ஆயிரங்கோடி மக்கள் ஆசையுடன் காத்திருக்கின்றனர். அரியணை வெறுமையாய் இராது. எம் நாட்டின் நல்வாழ்வைக் கருதிப் பன்னாடு சென்று இன்னலுறும் செயலைத் தாங்கள் மேற்கொள்ள விரும்புகின்றீர்கள். இந்நிலையில் அடியேனையுந் தங்களுடன் அழைத்துச் செல்லுவதே பொருத்தமானதாகும். தங்களுக்குப் பணிவிடை செய்து இப்பிறவியை முடிப்பேனாயின் அதுவே எனக்குப் பேரின்பத்தை விளைக்கும். எனது வேண்டுகோளை விடுத்துத் தாங்கள் தன்னந் தனியே செல்ல முயன்றால் என் உள்ளம் மீளாத் துயர்க் குழியில் வீழும் என்பதைத் தாங்களும் நன்கு அறிவீர்கள்" எனப் பலவாறு கூறி நின்றான்.

**பொய்கையார் முடிவு**

கணைக்காலன் இளங் காதலியுடனும், அன்பு மிக்க மக்களுடனும் இல்லறம் என்னும் நல்லறம் நடத்துகின்றவன். அரைக்கணமும் அவன் மக்கள் அவனைப் பிரிந்திரார். அன்றியும் சேரநாட்டில் வாழும் மக்களனைவரின் மனக்கோயில்களிலும் வீற்றிருப்பவன் அவன். அரசன் முடியைத் துறப்பின், அவர்கள் அனைவரும் இன்ப வாழ்வைத் துறப்பர் என்பது உண்மை. இந்நிலையில் கணைக்காலனைத் தம்முடன் அழைத்துச் செல்ல விரும்பாத

தாலும், அவன் தம்மைப் பிரிந்து இரான் என்னும் காரணத்தாலும் பொய்கையார் தம் எண்ணத்தைக் கைவிட்டார். உள்ளன்புடன் ஆ! முன் கன்றெனநின்ற கணைக்காலனை மகிழ்விப்பான் வேண்டித் தம் ஆயுட்காலமெல்லாம் அவனுடனேயே வாழ்வதாகவும் பொய்கையார் உறுதி கூறினர். இவ்வுரைகளைக் கேட்ட கணைக்காலன் அகத்தே எழுந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சோழன் பகைமையால் வரும் கேட்டைப்பற்றிய எண்ணங்கூட அவன் மனத்தை விட்டுச் சிறிது நேரம் மறைந்தது.

# 5. செங்கணான் சீற்றம்

**துணிச்சல்**

கணைக்காலனின் குதிரை வீரன் பொய்கையாரின் நிருபத்தைச் செங்கணானிடஞ் சேர்த்தான். விரைவில் அவன் பிரித்துப் படித்தான். "துணிச்சல்" "மடமை" "வித்தைச் செருக்கு" என்பன போன்ற சொற்களைத் தன் மீசை துடிக்க, விழிகள் கனலக் கூறினான். அவன் அருகில் இருந்த அமைச்சர் தம் மதி நுட்பத்தால் அவ்வாறு நடக்குமென்பதை முன்னரே அறிந்திருந்தார். ஆதலின், அவர் முகத்தில் வியப்புக் குறிகள் தோன்றவில்லை. எள்ளற் குறிகள் மின்னென வீசியெழுந்தன. இதை உய்த்துணரும் ஆற்றல் செங்கணானுக்கு அப்பொழுது இல்லை. மன்னன் வாழ்வுக்காகவே மன்னுயிர்கள் தோன்றின என்பது அவன் எண்ணம். எனவே, பொய்கையாரையும், சேரனையும் சிறைப்பிடித்துச் சோணாடு கொணர்ந்து வசைமொழி கூறி வருந்தச் செய்ய விரும்பினான். இம்முடிவைத் தன் நாட்டுப் பிரமுகருக்குத் தெரிவிக்க எண்ணியதால், உடனே அவையைக் கூட்டுமாறும் உத்தரவிட்டான்.

**சோழன் முழக்கம்**

அரசன் ஆணைப்படியே சபை கூடிற்று. மொழி வல்லாரும், அரசியல் துறையிற் பயிற்சி மிக்காரும், போர் பல நடத்திப் புகழ் பெற்றாரும், வாணிபத்தால் வளம் பெருக்கி வாழ்ந்தவரும் அங்கு ஒருங்கே கூடி இருந்தனர். செங்கணானும் அவர்கள் நடுவில் உயர

மான ஓர் இருக்கையில் அமர்ந்தான். சிறிது நேரம் சபை எங்கும் அமைதி நிலவியது. பின்னர் அரசன் ஆசனத்திலிருந்து எழுந்து தன் உள்ளக்கிடக்கையைப் பின் வருமாறு கூறினான். "சோழ நாட்டுப் பெருமக்களே! வளவன் புகழை வானளாவ நிலை நிறுத்தும் வீரர்களே! புலிக்கொடி அன்று இமயத்திற் பறந்தது ஆரியர் அதைக் கண்டு அஞ்சி ஒதுங்கினர். தமிழகத்தில் மீனவனும், வில்லவனும் வளவன் துணை பெற்றாலே ஆட்சி நடத்த முடியும் என்று எண்ணினர். அவன் பெயரைக் கேட்ட அளவிலேயே நிலைகுலைந்தனர்.

இன்று, நம் படை வலியையும், எம் தோள் வலியையும் அறிந்து கொள்ளும் ஆற்றலில்லாச் சேரன் ஒருவன் தோன்றியிருக்கிறான். அவன் கணைக்காலன். மூவனை வென்ற செருக்கு அவன் மதியை மயக்கி விட்டது போலும். மூவனினின்றுஞ் செங்கணான் வேறுபட்டவன் என்பதை அவன் சீக்கிரம் அறிவான் என்பது உறுதி. அவன் அரண்மனைப் புலவராம் பொய்கையார். அவர் பொன்னையும் பொருளையும் விரும்பாராம். வளநாட்டில் கலைவளம் உண்டு என்பது அவருக்கு ஐயமாகத் தோன்றுகின்றதாம். பித்தம் மீதூரச் சித்தந் திரிந்து புத்தி மயங்கிப் புரைமொழி பேசும் அப்புலவனை என் சிறையில் அடைத்து நன்மதி புகட்டுவதன்றோ நற்புகழ் தரும்! அறிஞரே! நீவிர் கூறவிரும்பும் ஆலோசனைகளை எமக்குத் தெரிவியுங்கள்." எனக் கூறித் தன் இருக்கையை அடைந்தான்.

**பயனில் மொழிகளும் அமைச்சர் கவலையும்**

செங்கணான் கூறிய வெம்மொழிகள் அங்குக் குழுமியிருந்த பலருக்கு வெறுப்பையுண்டு பண்ணின. சிலரது

முகத்தில் அவை இளநகையரும்புமாறு செய்தன. போரை விரும்பி, வாடியிருந்த வீரர் தலைவர் மகிழ்ந்தனர். அறிவில் மிக்க அறிஞர் தம் இறைக்கு வரும் ஏதத்தை முற்கூட்டியுணர்ந்து உள்ளூற வருந்தினர். ஆண்டில் முதிர்ந்த அமைச்சர் செய்வதறியாது தயங்கினர். 'கணைக் காலனை அழிப்போம்,' 'பொய்கையாரைச் சிறைப் பிடிப் போம்,' 'வில்லவனை வீழ்த்துவோம்,' 'வெற்றி மாலை சூடு வோம்' என்பன போன்ற தொடர் மொழிகள் எண் ணற்று எழுந்தன. அவற்றிடைப் பன்றியின்முன் முத்தெனத் தம் வாய்ச் சொற்கள் பழிக்கப்படுமே என் னும் எண்ணத்தாற் சிறிது மௌனமாக இருந்தார், அமைச்சர் தலைவர். எனினும் அவர் மனம் அவரை அமைதியாக இருக்க விடவில்லை. சோழன் வாழ்வையே அவர் விரும்பினர். அவன் புன்மதியைப் பற்றி நின்று பொருந்தாவுரை பல கூறி அவனை மயங்கச் செய்யும் வன்மனத்தவரை அவர் வெறுத்தார். தாம் கூறப்போகும் மொழிகள் அரசனுக்கு வெறுப்புண்டாக்கும் என்றும், அரசன் தனக்குக் கேடு விளைப்பான் என்றும் அவர் நன்கு அறிவார் எனினும், குற்றங் கண்டவிடத்துக் கூறாது விடுதலும் குற்றம் என அவர் எண்ணினர்.

"அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்"

என்னுந் தமிழ் மறைக்கு அவர் இலக்காக விளங்கினர். எனவே அவர் வாய்ப்புக் கிடைக்குமளவும் மடைத் தலை யில் வாடியிருக்கும் கொக்கெனக் கூம்பியிருந்தார்.

**அமைச்சர் பொன்னுரைகள்**

அமைச்சர் மௌனமாக இருப்பதையறிந்த சோழன் அவர் தம் உள்ளத்திலுள்ளதை ஒளியாது கூறுமாறு

பணித்தான். அமைச்சர் அவ்வரிய சமயத்தை நழுவவிட வில்லை. தம் இருக்கையை விட்டெழுந்து "பொன்னி நாட! நின் ஆண்மைக்குமுன் எவரும் எதிர்த்து நில்லார். புலிக் கொடிக்குமுன் விற்கொடி போரில் நிலைத்து நிற்காது. நீ களம் புகின் மாற்றார் மருண்டோடுவர். இஃது உண்மை. எனினும், யான் கூறுவதொன்றுண்டு. கலை வல்ல பொய்கையாரின் கல்வி அறிவைக் கவரும் எண்ணமே நின் மனதில் முதலில் தோன்றியது. இன்றோ, அவர் இன்னுயிரைக் கவரும் எண்ணமாக அது மாறிவிட்டது. இதுவும் காலக்கேடே. மன்னுயிரைத் தம் அறவுரையால் வழிப்படுத்த வந்தவர் புலவர் பெருமக்கள். எல்லோரும் இன்புற்றிருப்பதையன்றி, அவர் பிறிதறியார்.

"வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா(து) உண்டு கூம்பா(து) வீசி
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே......" (புறம் 47.)

என்னும் சீரிய வாழ்க்கையினர் அவர். அவர் தம் இன்னுயிரைப் போக்குவதாலோ, அன்றி, அவர் மனம் வாடுமாறு நடந்து கொள்வதாலோ நம் புகழ் எங்ஙனம் ஓங்கும்?

இனி, சேரனுடன் போரிட்டுப் புலவரையும், சேரனையும் சிறை வைப்பதால் புலவரது உள்ளப் பண்பாட்டை உணரும் நோக்கம் எவ்வாறு கைகூடும்? தன்னை விரும்பாப் பெண்ணை விரும்பி, நாட்கள் பலவாகப் போர் நடத்தி, வீரர் பலரைத் தியாகஞ் செய்து, இறுதியில் தீக்குழியில் கிண்டிப்பார்க்கும் அறிவிலியின் தீவினை போலாகி விடாதோ நம்செயல்? அன்றிச் கணைக்காலன்

நம்முடன் பகைகொள்ளும் நாட்டம் உடையனும் அல்லன். மூவனை வென்றபொழுது இருந்த அவன் மனநிலை வேறு. எனவே, புலவர் வருந்த நடப்பது சற்றும்பொருந்தாது," எனக் கூறி நின்றார்.

**சோழனது வெவ்வுரைகள்**

அமைச்சர் கூறிய அறிவுரைகள் சோழனுக்கு ஆருச் சினத்தை உண்டு பண்ணின. "இதுவரை எம் உரைகளை மறுத்துக் கூறிய எவரும் உயிர் வைத்துக் கொண்டிருந்த தில்லை. என் தோள் வலியையும, மான வாழ்க்கையையும் நீர் சிறிதும் மதித்திலீர். சிறு சொல் சொல்லிய அவரை ஒறுத்தல் பழியோ? நன்று, நன்று. வழி வழியாக இந்நாட்டின் நன்மைக்கென உழைத்த மரபில் உதித்தவர் என்னும் ஒரே காரணத்திற்காக உம்மை விடுகின்றேன்

"பழுதொண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வர்
எழுபது கோடி யுறும்"

என்பது ஆன்றோர் வாக்கு. உம்மை இவ்வாறே விடுவோ மாயின் எமது பகைவருக்குப் பல்லாற்றானும் நீர் துணை புரியவுங்கூடும். எனவே, சேரனை வென்று, பொய்கை யாரைச் சிறைக்கூடத்துக்குக் கொணரும் வரை உமக்குச் சிறைத் தண்டனை அளிக்கின்றேம்" எனக்கூறித் தன் சேனை வீரனை யழைத்து உடனே படைகளை ஒழுங்கு படுத்துமாறு கூறிவிட்டு, மின்னெனப் பாய்ந்து அரண் மனையை யடைந்தான். அமைச்சரைக் காவலர் அழைத் துச் சென்றனர். கடமையைச் செய்து முடித்து மகிழும் கரும யோகியெனப் புன்னகை தவழும் முகத்துடன் அமைச்சர் சிறைக்கூடஞ் சென்றார். ஏனையோர் இமைப் பொழுதில் அவையினின்று நீங்கினர்.

# 6. கழுமலப் போர்.

**பழங்காலப் போர் முறை**

நந் தமிழகத்தின் பண்டைச் சிறப்பியல்புகள் மிகப் பல. அதற்றுள் அவர் நடத்திய போர் முறையும் ஒன்று. மறத்துறையிலும் அவர்கள் அற முறை கண்டனர். மண்ணாசையால் மன்னர் இருவர் முரண, எண்ணில்லாப் பெண்களும் பிள்ளைகளும் உயிரையிழக்கும் நிலை பழங்காலத் தமிழர்களிடம் இல்லை. பகைவரது நாட்டுள் வாழும் வலியற்ற மக்களையும், ஆவினங்களையும் அவர்கள் கொல்லுவதில்லை. எனவே, முரசறைந்து தம் எண்ணத்தை அவர்கள் அறியுமாறு செய்வது வழக்கம்.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்(கு) அருங்கடன் இருக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எமஅம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்."

எனக் கூறும் புறநானூற்று அடிகள் இவ்வுண்மையைத் தெளிவு படுத்துகின்றன. இதனால் அக்காலத்தில் எத்தகைய கடும்போர் நடந்தாலும் பசுவினங்களையோ, அந்தணரையோ, பிணியுடையோரையோ, மகப்பேறில்லா மானிடரையோ, கொல்லுங் கொடுந் தொழில் புரிவதில்லை என்பது அறியப்படுகின்றது. அணுகுண்டு தன் அளவில்லா ஆற்றலைத் தோற்றுவிக்கும் இக்காலத்தில் வாழும் நமக்கு இது வியப்பைத் தருகின்றது. எனினும், அக்காலத்தில் இம்முறை நடைமுறையில் இருந்தது.

இவற்றையன்றி, படையிழந்த வீரன் ஒருவன் மேல் படை விடா ஆண்மையும் அக்காலத்தில் இருந்தது.

முதலாம் நாட்போரில் தன் படையையிழந்து கவிழ்ந்து நிலங்கிளையா நின்ற இராவணனை நோக்கி, 'இன்று போய்ப் படையுடன் நாளை வா" என இராமபிரான் கூறியதாகக் கம்பர் கூறுகின்றார். 'புறவேலோச்சா' ஆண்மை மிக்கவர் வாழ்ந்த நாள் அது.

**ஒரு விலக்கு**

இவ்வற நெறியைக் கடைப்பிடித்து ஒழுகும் ஆண்மை செங்கணானிடம் இல்லை. கடமையை உணர்ந்து, உண்மையைக் கூறிய அமைச்சனைச் சிறைப் படுத்திய அவனிடம் இம்முறைகளை எதிர்ப் பார்த்தல் பொருந்துமோ? அரசன் ஆணைப்படி சேனை வீரர் படை கூட்டினர். உறந்தையம்பயை விட்டுத் தன் படையுடன், மேற்றிசை நோக்கிச் சென்றான் சோழன். காற்றினும் கடுவிசையுடன் எதிர்ப்பட்டவரை யெல்லாம் தம் வாளுக் கிரையாக்கினர் சோணாட்டு வீரர். கண்டவூரையெல்லாம் அவர்கள் தீக்கிரையாக்கினர்; பெண்டிரையும் பிள்ளை களையும் இரக்கமின்றிக் கொன்றனர்; பயந்து ஓடியவர் களையும் விடாது பிடித்து, அவர்தம் தலைகள் உருண் டோடச் செய்தனர். எங்கும் அவலக்குரல் எழுந்தது. எங் கணவனெங்கே எங்கே என்று, அலறியோடிய கற் புடைப் பெண்டிர் விட்புல மெய்தினர். மக்களைத் தேடி மருகோடியவர் மடிந்து வீழ்ந்தனர்.

**சேரனுக்குச் செய்தி**

தப்பியோடிய பலர் தொண்டித் துறையை யடைந் தனர், வாயிலோன் பின் தொடர அரண்மனையுட் புகுந்

தனர். அவரைக் கண்டார் கலங்கினர். உண்மையை அறியும் எண்ணத்தால் அவரும் அன்னவரைத் தொடர்ந்து அரியணையைக் குறுகினர். உடல் நடுங்க, நாக்குழற, அவர்கள் மொழிந்த சில சொற்றொடர்கள் அவர்கள் கருத்தை ஒருவாறு புலப்படுத்தின. சோழன் அறத்துறையை மறந்தான்; மறத்துறையை மேற்கொண்டான் என்பதைக் கணைக்காலன் அறிந்தான்.

**கணைக்காலனது மனநிலை**

சோழன் தன்னுடன் போர் தொடுப்பான் என்பது கணைக்காலனுக்குத் திட்டமாகத் தெரியும். எனினும், அவன் அறப்போர் நடத்துவான் என எண்ணியிருந்தான். தன்பாலெழுந்த சினத்தைத் தன் குடிகள் மேற்செலுத்தும் சோழனது மடமையைக் கேட்டு மனம் வருந்தினன் கணைக்காலன்.

தன் முக வாட்டத்தைக் கண்டு பொய்கையார் மனமுடைவாரே என்னுங் கவலை ஒருபுறம் அவனை வாட்டியது. எனவே, தன் உள்ளத்தெழுந்த போராட்டத்தை வெளிக்காட்டாது, போருக்குத் தயாராகுமாறு தன் சேனைத் தலைவனுக்குக் கட்டளையிட்டான். சேனைத் தலைவனும் காலந் தாழ்த்தாது வீரரைக் கூட்டினன். சேரமான் தானே படையை நடத்தினன். வீரர், தம் விற்கொடியின் கீழ் நின்று போர் புரியும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணிப் பல வீரமொழிகளைக் கூறிக்கொண்டு போர்க்களத்தை நோக்கி விரைந்து சென்றனர்.

**பொய்கையாரின் அருளுடைமை**

சேரன் சோழனை எதிர்த்துப் போரிடச் சென்றான். சோழனும் சேர நாட்டுள் வந்து விட்டான். இருவரும் எதிர்த்துப் போரிடுவார் என்பது உறுதி. அந்நிலையிலும் போரெழாதவாறு தடுக்க முயன்றார் பொய்கையார். தாமும் சேரனுடனே போர்க்களத்தை நோக்கிப் புறப் பட்டார். தன் ஆசிரியருக்கு இடையூறு நேரிடும் என எண்ணிய சேரன் தன்னால் ஆனமட்டும் தடுக்க முயன்றான். அவன் முயற்சி பயனற்றுப் போயிற்று. சந்து செய்து வைக்கும் நற்செயல் புலவர் உலகுக்குப் புதிதன்று. நலங்கிள்ளியும் எதிரூன்றி நின்றபொழுது, அவரை சந்து செய்து வைத்த கோவூர்கிழாரின் செயலை அறியாதார் யார்? தொண்டைமான் அவையகத்தே சென்று அதிகமானின் ஆண்மைத் திறனைக் கூறிப் போரை விலக்கிய ஔவையாரின் பேராற்றலை உணரா தார் யார்? தம் நாவன்மையால் மன்னுயிரைக் காப்ப தையே தம்கடனெனக் கொண்டு வாழும் அறிஞர், அஞ்சி அரணுள் பதுங்கி இருப்பரோ? பொய்கையாரும் தம் கடமையை நினைத்தே சேரன் படைக்கு முன் விரைந்து சென்றார்.

**படை வீடு**

கணைக்காலன் தன் சேனையுடன் **கழுமலம்** என்னு மிடத்தை யடைந்தான். எங்கும் இருள் சூழ்ந்தது. அது கார்காலமாக இருந்தமையின், மழையும் பெய்து கொண்டிருந்தது. வானவெளியில் உடுக்கணங்களோ

மதியோ காணப்படவில்லை. மேற்செல்வது கடினமாக இருந்தமையின், ஆண்டு ஒரு படைவீடமைத்து அங்கேயே தங்கினர். ஞாயிறு மறைந்தபின் போர் செய்யும் வழக்கம் அக்காலத்தில் இல்லையாதலின், சோழன் அன்றிரவு தன்னைத் தாக்குவான் என்று கணைக்காலன் எதிர்பார்க்கவில்லை. தன் மனைவி மக்களைப் பிரிந்து வந்த கவலையுங்கூட அவன் மனத்தை விட்டுச் சிறிது நேரம் அகன்றது. தன் ஆசிரியரான பொய்கையாரின் திருவடிகளின் அருகில் இருக்கும் பேறு அவனுக்குக் கிட்டியது. அதுவே அவனுக்குப் பேரின்பத்தை நல்கியது. இறைவனின் திருவடி நிழல் தன் ஐம்புல நுகர்ச்சிக்கும் அளவற்ற இன்பம் நல்கிற்று என்பதை,

> " மாசில் வீணையும் மாலை மதியமும்
> வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்,
> மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
> ஈசன் எந்தை இணையடி நீழலே. "

என்னும் அடிகளால் அப்பர் குறிப்பிடுகின்றார். பொய்கையார் திருவடிகளும் கணைக்காலனுக்கு அத்தகைய இன்பத்தை நல்கிற்றுபோலும்! எனினும், தன் நாட்டு மக்கள் அடையும் அல்லல் அவன் மனக்கண்களின் முன் தோன்றாது இருக்கவில்லை.

**போர்**

இந்நிலையில் சோழனின் வீரர்கள், படை வீட்டைச் சூழ்ந்து கொண்டனர். எங்குந் தீவட்டிகள். நாற்புறமும் வளநாட்டு வீரர்கள். சேரனின் படைகள் செய்வதறியாது திகைத்தன. தன் ஆசிரியருக்குச் சோழன்

இன்னல் விளைப்பான் என்னும் எண்ணத்தால் கணைக் காலன் அவரை விட்டுப்பிரியாது காத்து நின்றான். பொய் கையாரின் எண்ணம் கைகூடவில்லை. கணப்பொழுதில் கணைக்காலனையும், பொய்கையாரையும் சோணாட்டு வீரர் பிடித்துக்கொண்டனர். சேரனது சேனை சிதறி ஓடிற்று. ஓடிய சேனையைத் தொடர்ந்து சென்று வெட்டி வீழ்த் தினர் சோணாட்டு வீரர். இறந்தவர் தவிர இருந்தவர் ஓடித் தப்பினர். புலவரையும், சேரனையும் இமைப் பொழுதில் சோழன் முன் கொணர்ந்து நிறுத்தினர் சோ ணாட்டு வீரர்.

## சோழன் ஆணை

தன் முன் நின்ற அறிவுச் சுடரான பொய்கையாரை யும், அருட் பிழம்பான சேரனையும் எள்ளி ஒரு கணம் நகையாடினான் சோழன். மறத்தின் முன் அறம் வரம் வேண்டி நின்றதுபோல் அக்காட்சி தோன்றிற்று.

" அறத்தினூங்கி(கு) ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு "

என்னும் தமிழ்மறை, அக்காட்சியைக் கண்டு அகத்தே துன்புற்ற சிலருக்குப் பயனில் கூற்றாகவே தோன்றியிருக் கும். எனினும், புலவருக்கும் அவர் மாணவனான சேர னுக்கும் அவ்வாறு தோன்றவில்லை. அறம் வெல்லும் என்பது அவர் மனத்தே ஊறிக் கிடந்தது. சோழனது அறியாமையும், சேர வீரர் மாண்டுகிடந்த துயரக் காட்சி யும், அவர்கள் மனதில் சோக உணர்ச்சியைக் கிண்டிவிட் டனவே யன்றிப் பிற செயல்களெவையும் அவர்களின்

மன அமைதியைக் கெடுக்கும் ஆற்றல் பெற்றில. அவர்கள் மனத்துக்கண் எழுந்த சோகமும் மனத்துள்ளே அடங்கிற்று. அவர்கள் முகத்தில் இளநகை அரும்பியது.

இடுக்கண் வருங்கால் நகுக ; அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.

என்று கூறியவள்ளுவன், சான்றோர் தம் வாழ்க்கையை நேரிற் கண்டு கூறிய செந்நாப் புலவனன்றோ! அவர் தம் புன் முறுவல் சோழனுக்கு அளவற்ற வியப்பைக் கொடுத்தது. வெற்றி பெற்றுவிட்டதாக எண்ணிய செங்கணான் தன் வீரரை, உடனே தன் நாட்டிற்குத் திரும்புமாறு பணித்தான். புலவரையும், கணைக்காலனையும் தேர்க்கால் களிற் கட்டித் தன் நாட்டிற்குக் கொணர்ந்து, தனித்தனிச் சிறைகளில் அடைத்து வைக்குமாறு கட்டளையிட்டான். "**பெருமை யுடையாரைப் பீடழித்த லின்னு**" என்னும் கபிலன் உரையின் பொருளை யுணரும் ஆற்றல் அவனிடம் இருந்திருப்பின் அவன் அவ்வாறு செய்வானோ? சூழ்வார் கண்ணாக வாழா அவனை இடித்துரைப்பார் யார்?

சோழன் சேனைகள் கீழ்திசையை நோக்கிப் புறப்பட்டன. செங்கணான் தன் மெய்காப்பாளருடன் குதிரை மிசை ஏறி உறந்தையம்பதியை நோக்கிக் காற்றினுங் கடுகிச் சென்றான். புலவரும் சேரனும் அன்றிரவே கட்டுண்டவராக உறையூரை யடைந்தனர். காவலர் அவ்விருவரையும் தனித்தனிச் சிறை இடங்களில் அடைத்தனர்.

# 7 சிறைக் காட்சி

## சிறையிற் பொய்கையார்

இளமையில் வறுமையின் ஆற்றலை ஒருவாறு அறிந்திருந்தார் பொய்கையார். ஆனால், சேரமான் அரண்மனையை யடைந்த நாள் முதல் அரண்மனைச் செல்வங்களனைத்தையும், அவர் நுகர்ந்தார். எதிர்பாராத நிலையில் இறைவன் திருவிளையாடல் அவரைச் சோழன் சிறையில் கொண்டு சேர்த்தது. இன்பத்தில் திளைத்திருத்தலும், துன்பத்தைக்கண்டு அஞ்சி நிற்றலும் அவரிடம் இல்லை. சிறைக்கூடத்தில் கரடு முரடான தரையில் படுப்பதும் சேரன் அரண்மனையில் பஞ்சணைமேல் துயில் கொள்ளுவதும் அவருக்கு ஒன்றாகவே தோன்றின. பொறியுணர் வைத் துறந்த அவருக்குப் பூமாதேவியின் மடிமிசைப் பள்ளி கொள்வது மிக்க விருப்பதைக் கொடுத்தது எனவே, அவர்,

“ இதுகாறும் நின்னின் எளிதிற் பிரிந்தே
பதிதொறும் எகிப் பஞ்சணை யுறங்கினேன்
அப்பொழு தெல்லாம் அடியேன் உற்றன
செப்பருந் துயரே ; சிறிதுமின் பில்லை ; மற்(று)
இப்பொழுதோ, யான் இன்ப மெய்தினேன்
ஒருபே ரன்னாய் உன் றன தருமைத்
திருமடி யதனிற் சிறப்புட னுறங்கும்
பெரும்பேறு பெற்றேன் ; விரும்பேன் எதனையும்
இன்றே நன்னாள் ; நன்றே யிருநாள். ”

என்பன போன்ற இன்ப மொழிகளைக்கூறித் தரையின் மேற் சாய்ந்தார். எனினும், தன் பொருட்டாக

அரச இன்பத்தைத் துறந்து சிறையில் வாடும் கணைக் காலனை எண்ணிச் சிறிது கவன்றார். அன்றியும், சோழன் அறியாது தீவினை செய்து அழிவை எதிர்நோக்கி நின்ற நிலையை எண்ணியும் வருந்தியிருக்கலாம்.

"நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்"

என்னும் வள்ளுவன் கொள்கை பொய்கையாரின் மனத் திடை உருக்கொண்டு, அவனுக்காக அவரைப் பரிதபிக்கு மாறு செய்திருக்கலாம். அன்றிரவு இவ்வாறு கழிந்தது.

**செங்கணன் குறும்பு**

சோழன் அன்றிரவை ஒரு யுகமெனக் கழித்தான். எப்பொழுது விடியும், புலவரை எள்ளி நகையாடலாம், என எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். பொழுதும் புலர்ந்தது. பொய்கையாரைத் தன் அரண்மனைக்கு அழைத்து வருமாறு இரு சேவகருக்குக் கட்டளையிட் டான். சிறிது நேரத்திற்குள் பொய்கையாரை அரசன் முன்னிலையிற் கொணர்ந்து நிறுத்தினர் அவ்விரு சேவக ரும். பொய்கையாரைக் கண்டவுடனே சோழன், "தமி ழன்னையின் திருப்பணியாளரே! வளவனின் பொன்னா லும் பொருளாலும் கவரப்படாப் புலவர் மணியே! வாருங்கள். இவண் நின்று எம் அரண்மனையை அழகு செய்யுங்கள்." என்று கூறிக் கலகல வெனச் சிறித்தான். ஆண்டு நின்ற சேவகரும் நகைத்தனர். புலவர் மௌன மாகவே இருந்தார். ஆகையால், சோழன், "புலவரே!

உம்மை, யான் சிறையில் அடைந்திருக்கின்றேன் என்பதை நீர் மறந்துவிட வேண்டாம். நான், நினைத்தால் இப்பொழுதே உம் உயிரையும் போக்க முடியும். புலவனைக் கொன்ற பழி, வளவனுக்கு வேண்டாம் என்றே விட்டு வைக்கின்றேன்," எனச் சிறிது கோபமாகக் கூறினான்.

**புலவர் உரை**

இம் மொழிகள் புலவரின் உள்ளத்தில் தைத்தன. அவர் உணர்ச்சியைத் தூண்டின. எனவே, அவர்,

"உன்னை நீ யறியா யுரைத்தனை பேதாய்!
*　　*　　*　　*　　*
சொற்குறி யறியாத் தோன்றலை! கேண்மோ ;
யானுன் சிறையலேன் ; எனைச்சிறைப் படுத்தநீ
தானும் வலையலை ; தகாதன பிதற்றேல்.
யானே யென்னை யிச்சிறைப் படுத்தேன் ;
ஏனோ ரொன்றும் எனைச்செய் தாரலர்
செய்யவும் வலரலர் ; மெய்யிது வாமே"

எனக் கூறித் தமது ஒப்பற்ற கொள்கையை வெளியிட்டார். உடலைச் சிறைப்படுத்துவதினால் உள்ளுறையும் சக்தியை அடக்க முடியாதென்பதைச் செங்கணான் அறியான். உடலுக்கே யன்றி, உயிரைச் சிறை செய்யும் சக்தி வேறெதற்கும் இல்லை என்பது அவன் அறிவுக்கு எட்டாத உண்மை. எனவே, பொய்கையாரின் கருத்து அவனுக்கு அப்பொழுது விளங்கவில்லை.

**உரையின் விளக்கம்**

பொய்கையார் கூறிய உரைகளின் உட்கருத்தை யறியாத சோழன், "யான் உம்மைச் சிறையில் வைத்

திருப்பதும் பொய்யோ? பொய்கையார் என உமக்குப் பெயரிட்டவர் நுண்ணறிவினரே போலும்!" எனக் கூறித் தன் அறியாமையை வெளியிட்டான். இவ்வுரையைக் கேட்ட புலவர் அவன் அறியாமையை நீக்க எண்ணினர். தம்மை அடைத்து வைத்து வசை மொழி கூறி இன்புறும் அவனுக்கு, உறுதிப் பொருளை, உபதேசித்து இசையுண்டு பண்ண எண்ணினர், பொய்கையார்.

"இன்னசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?"

என்னும் தேவர் மொழியை, மெய்ப்பித்துக் காட்டும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. எனவே,

"......... நீ பற்றிய தெனுதி
யாக்கையே யன்றிப் பார்க்கு மிடத்து
வேரேன் றிலேயே! நானுமிவ் வுடலம்
என்ன தன்று; மற் றிடையே போந்ததோர்
[1] துச்சிலே யன்றி யிச்சைகொண் டென்றும்
மெச்சிடற் பாற்றே? விளம்பாய், வேந்தே!
இதனைக் கைக்கொண் டெனைச்சிறைக் கொண்டதாக்
[2] கதனெழ வுரைப்பினுங் கட்டுரை யாமோ?
என்னுட லுறையு மின்னுயி ராகிய
உன்னைச் சிறையி னிட்டனை கொல்லோ?
என்சிறைக் கோட்டம் என்னுட லாமால்."

என்று கூறினர்.

சோழன் பொய்கையாரின் உடலைப் பற்றிச் சிறையிலிட்டானே யன்றி, அவர் உயிரைச் சிறையிலிடவில்லை.

---

1. துச்சில் - ஒதுக்கிடம்.
2. கதன் - கோபம்.

அது புலவரது உடற்குள் அவராலேயே (ஆணவம், கன்மம், மாயை யென்னும் மும்மலங்களால்) சிறைப்படுத்தப்பட்டிருந்தது. அதைச் சிறைப்படுத்தும் வலி எவர்க்கும் இல்லை. இதுவே சோழன்மேல் அன்புகொண்டு பொய்கையார் அருளுடன் கூறிய அறவுரையின் சாரம்.

**பிறவிக் குணம்**

இவ்வுரையின் கருத்தை யுணர்ந்து கொள்ளும் நிலையில் அவன் இல்லை. ஆண்மைக்கனல் ஏறி, அறிவு மழுங்கி நிற்கும் அவன் உள்ளத்தில் உடனே பயன் விளைக்கும் ஆற்றல் பொய்கையார் வாய்ச் சொற்கும் இல்லை. புலவர், தன் கைப்பொம்மையாக இருக்கிறார்; தன் வாளுக்கு அவரை எந்த விநாடியிலும் இரையாக்கலாம் என்பது அவன் எண்ணம். புலவர் நிலையையும் அவரது துணிவையும் அகத்தே எண்ணிச் சிறிது நகைத்தான் சோழன். "புலவரே! நிறுத்தும் உம் பொருளற்ற பொய் மொழிகளை. உம் உயிர் ஊசலாடுகின்றது என்பதையே நீர் மறந்து விட்டீர். எம்மிடம் பணிவாக நடந்து உயிர்ப்பிச்சை பெற்றுச் செல்லும். நுண்ணறிவற்ற உம்மை என்ன செய்யப் போகிறேன் என்பதை நாளை உமக்கு அறிவிக்கின்றேன். அதுவரை எண்ணிய வெண்ணியாங் குரைத்து உழலும் பைத்தியமே போல் என்ன வேண்டுமோ புலம்பும்," என்று கூறித் தன் காவலாளரிடம் திரும்பி,

"காவலரே! இவரைச் சிறைக் கூடத்துக்கு அழைத்துச் சென்று, ஆங்குள்ள இருட்டறையில் அடைத்து வையுங்கள். உணவாவது, நீராவது

இவருக்கு அளிக்க வேண்டாம். இவர் என்ன சொன்னு லும் செவி சாய்க்கவும் வேண்டாம். இவர் கேட்கும் பொருளற்ற வினுக்களுக்கு விடை கூறவும் வேண்டாம். இதில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உடனே அழைத்துச் செல்லுங்கள்" எனக் கூறி ஆசனத் திலிருந்து எழுந்திருந்தான்.

ஏவலாளர் இருவரும் புலவரை அரசன் கூறியவாறே இருட்டறையில் அடைத்து வைத்தார்கள். பொய்கை யார் சிறிதும் மனம் தளரவில்லை. செங்கணுனின் தீச் செயல்கள் அவரது அருளுள்ளத்தில் அவன்மேல் அன்பை மேன் மேலும் வளர்த்தன. 'அடினும் ஆவின்பால் தன் சுவை குன்ருது' என்பது ஆன்ருேர் வாக்கன்ருே !

"உணவளியாது, சிறையில் அடைத்து வைப்பதே இப்புலவருக்குப் பொருத்தமான தண்டனே. புலி பசித் தால் புல்லேத் தின்னும். முற்றுந் துறந்தவரும் வயிற்றுக் கொடுமையை வெல்லும் வலி பெற்றிலர். எக்காலத்தும் எவரும் வயிற்றின் கொடுமையை எதிர்த்துப் போரிட்டு வென்றிலர். நாளே, பொய்கையார் வழிக்கு வந்து விடு வார். சேரனேப் பாடி இச்சிறையை யடைந்தோம், இனிச் சோழனேப் பாடிச் சிறை வீடு பெறுவோம் என அவர் எண்ணுவார் என்பது உறுதி," எனப் பலவாறு தன் மனத்துள்ளே சிந்தித்துக் கொண்டு நந்தவனத்தைக் குறுகினுன் செங்கணுன்.

**அந்திக்காட்சி**

மாலேப் பொழுதில் நந்தவனஞ் சென்று உலாவுவது செங்கணுனின் வழக்கம் அவ்வனம் தனிமையிற் செல்

வோரை வருத்தும் தகைமையது. காண்தகு இன்னெழில் மிக்க காட்சிகளை அளவின்றித் தன்னகத்தே கொண்டு விளங்கியது. அனற் கதிரால் உலகை வாட்டித் தன் ஆட்சியை முடித்துச் செல்லும் கதிரவனை எள்ளி நகையாடிய வண்ணம் கீழ்த்திசையிற் காட்சி யளித்தது சந்திரன். அதன் தண்கதிரைக் கண்ட மாத்திரத்தில் முல்லையரும்புகள் மலர்ந்து தலைவணங்கி வரவேற்று நின்றன. தாமரை மலர்கள் அற்பர் வாழ்வைக் கண்டு மௌனங் கொள்ளும் யோகிகளே போற் கூம்பா நின்றன. அம்மலர்களிடை அன்னங்கள் துயில் கொண்டன. அப்பொய்கையின் அருகில் உள்ள பூம்பொழில் ஒன்றில் குயிலினங்கள் இசை பாடின. மயிலினங்கள் குடதிசை நோக்கி நின்று ஆடின. தம் பெடையினங்களைக் கூவி யழைக்கும் மாடப் புறுக்களின் குரல், இடையிடையே 'நன்று' எனக் கூவி ஊக்கமளிக்கும் மக்களின் பேரொலி யென எழுந்தது. சுருங்கக் கூறின் இயற்கையன்னையின் எழிற்கோலம் அச் சோலை எனலாம்.

அது கூடினரை மகிழ்விக்கும்; பிரிந்தாரை வருத்தும். அறநெறியைத் துறந்து அருளின்றி மதிமயங்கி நிற்கும் செங்கணனின் மதியையும் வருத்தின தென்றே கூறல் தகும். இயற்கைக் காட்சிகள் இறைவனின் இன்னருளைக் கட்புலனுக்குக் காட்டும் சித்திரத்திரைகளே யாகும். அருளில்லார் அவன் அருளின் தன்மையை எங்ஙனம் உணர்ந்துகொள்வர்? என்றும் உணரார். இந்நிலையில், மன அமைதியை இழந்த செங்கணனும் மேலும் அமைதியை இழந்து அரண்மனையை அடைந்தான்.

164396

**நாட்டியம்**

இசைக் கலைவல்லாரும், நாடக மாதரும் அரங்கில் நிறைந்திருந்தனர். யாழ்ப்பாணரும் பாடற்பாணரும் ஓரிடத்திலிருந்து இசை எழுப்பினர். குழல் தண்ணுமை போன்ற இசைக் கருவிகள் கூடி இசைத்தன. அவ் விசைக் கொப்ப ஆடல் மகள் ஒருத்தி அரங்கில் ஆடினாள். மக்களனைவரும் கண்டு கேட்டு மகிழ்ந்திருந்தனர்.

இசைக்கு உருகா நெஞ்சுண்டோ? ஆவினத்தைக் கண்ணன் இசையால் நடத்தினன் என்பர். வழிப்பறியை மேற்கொண்டு வாழ்க்கை நடத்தும் கொடுந் தொழி லாளரும் இசையின் வயப்பட்டுத் தம் கையிலுள்ள படை களை நழுவவிட்டு மறத்தொழிலை மறந்து நிற்பாராம். இக்கருத்தை முடத்தாமக் கண்ணியார் என்ற பொரு நராற்றுப்படை ஆசிரியர்,

> "ஆறலைக் கள்வர் படைவிட அருளின்
> மாறுதலைப் பெயர்க்கும் மருவின்பாலை"

என்னும் அடிகளாற் குறிப்பிடுகிறார். தினைக்கதிரை உண்ணவரும் யானைகள் குறிஞ்சிப் பண்கேட்டுச் செயல் மறந்து நிற்குமாம். இவை இலக்கியத்திற் கண்ட இசை யின் சிறப்பியல்புகள். எனினும், அன்று செங்கணனின் மனதைக் கவரும் ஆற்றல் இசைக்கோ, நாட்டியத் துக்கோ அமையவில்லை.

**மனக்குழப்பம்**

நடன மேடையை அவன் இரு கண்களும் நோக்கின; ஆனால் அவன் மனம் அலைவாய்த் துரும்புபோலானது. அங்கு அமைதி நிலவவில்லை. ஏதோ ஒரு தவறு செய்து

விட்டதாக அவன் மனதில் உணர்ச்சி அலைகள் எழுந்தன. எனினும் அதன் காரணம் அவனுக்குப் புலப்படவில்லை. இசையின் இனிமையில் ஈடுபட்டுக் கூடிமகிழ்ந்தனர் அனைவரும்; ஆனால் அவன் மனம் மட்டும் தனிமையில் வாடியது. ஆதாரமில்லாச் சிந்தனை அலைகள் மின்னெனத் தோன்றி மறைந்தன. இவ்வாறு நடனமும் பயனற்று முடிந்தது. அரசன் எழுந்து பள்ளியறைக்குச் சென்றான்.

**பள்ளி அறை நிகழ்ச்சி**

அன்று மாலை அறுசுவையுண்டியை அன்பருடன் கூடி உண்டு மகிழவும், அன்பருடன் அளவளாவவும் அவன் விரும்பவில்லை. "என் ஆருயிர்க் காதலரே, தாங்கள் இன்று உண்ணாமலும் உரையாடாமலும் முகம் வாடிக் காணப்படுகின்றீர்களே! அதன் காரணம் யாது?" என வினவினாள் அவன் அன்புமிக்க காதலி இராசமாதேவி. "வேறொன்றுமில்லை" என்பதே அவன் பதில். இராசமாதேவி வேறு சில முறைகளாலும் அவன் மனத்தே எழுந்த எண்ணத்தை அறிந்து கொள்ள முயன்றாள். எனினும் கூடாமற் போயிற்று.

அன்றிரவு முழுவதும் அவனுக்கு உறக்கம் வரவில்லை. படுக்கையிற் புரண்டு கொண்டே சேரமன் இரவின் முதல் மூன்று சாமங்களைக் கழித்தான். நான்காம் சாமத்தில் சிறிது நேரம் தூங்கினான். எனினும் திடீரென விழித்துக் கொண்டான். படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தான். 'ஐயோ! ஐயோ!!' எனச் சத்தமிட்டு அலறினான். அரண்மனையில் துயின்ற அனை

வரும் விழித்தெழுந்தனர். இராசமாதேவியும் விழித்தெழுந்தாள். தன் நாயகரின் நிலை அவளுக்குப் பயத்தை உண்டுபண்ணியது. அங்குக் கூடிய அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு அரசனிடம் நிகழ்ந்ததைக் கூறுமாறு வேண்டினாள். கனவில், யாரோ ஒருவர் தன்னைக் கொல்ல முயன்றதாகவும் தான் தப்ப முயன்றதாகவும் கூறினான் செங்கணான்.

**தேவி உரை**

இராசமாதேவியும் அன்றிரவு ஒரு தீக்கனாக் கண்டு என்ன நிகழுமோவென வெண்ணிக் கலக்கங்கொண்டிருந்தாள். எனவே, அவள், 'என் ஆருயிர்க் காதலரே! யானும் நேற்று ஒரு தீக்கனாக் கண்டேன். அஃது என் மனத்தை விட்டு அகலாது நிற்கின்றது. அதை நினைத்தாலும் என் உடல் நடுங்குகின்றது.

தாங்கள் பரிவாரங்களுடன் ஒரு கானகத்துட் சென்றீர்கள். அங்குத் தவ நிலையில் இருந்த துறவி ஒருவரை நீங்கள் பலவாறு இகழ்ந்துரைத்தீர்கள். அன்றியும், நம் வீரர் சிலர் அவரை நமது தலைநகருட்கொணர்ந்து சிறையில் வைத்தனர். சிறிது நேரம் அவர் சிறைக்குள் இருப்பவர் போல் தோன்றினார். பின்னர் அவர் ஆவியாக வெளிப்பட்டார். கதவுகள் தாழிட்டபடியே இருந்தன. வெளிப்பட்ட அவரது ஆவி நம் பள்ளியறைக்குள் வந்து தங்கள் கழுத்தைப் பிடித்து நெரித்தது. வலி பொறுக்கமாட்டாது தாங்கள் அலறினீர்கள். இறக்குந் தருவாயிலிருந்த தங்களைக் கண்டு நான் ஐயோவெனக் கூச்சலிட்டு அழுதேன். அவ்வளவில் விழித்துக்கொண்டேன். ஆனால், உண்மை

யில் நான் கண் விழித்தபோது நீங்கள் படுக்கையின் மேல் புலம்பிக் கொண்டு உருளுவதைக் கண்டேன்' என நடுக்கத் துடன் கூறி முடித்தாள்.

இராசமாதேவி தன் கனவைக் கூறும் பொழுதே, இவை யெல்லாம் பொய்கையாரைச் சிறை செய்ததின் விளைவு எனச் செங்கணன் உணர்ந்தான். எனவே அவ ரைச் சிறை வீடு செய்வதால் மட்டுமே, வரும் ஆபத்துக் குத் தப்பமுடியும் என்னும் முடிவுக்கு வந்தான் செங்க ணன். இராசமாதேவியும் பணிவுடன் புலவரை விடு விக்க வேண்டி நின்றாள். செங்கணனும் பொய்கை யாரைத் தான் விடுதலை செய்ய முடிவு செய்திருப்பதாகத் தன் மனைவிக்குத் தெரிவித்தான்.

# 8. பொய்கையாரின் வெற்றி

## சிறையில் அமைச்சர்

செங்கணன் ஆழ்ந்து சிந்திக்காது அமைச்சரைச் சிறையிலிட்டான் என முன் அறிந்தோம். நன்மை செய்வோர் துன்பத்தையும், தீமை செய்வோர் இன்பத்தையும் சிறிது காலம் இவ்வுலகில் அனுபவிக்கின்றனர். இதை நாம் நேரிற் காண்கிறோம். உற்றதை உணரும் ஆற்றலிலா மன்னரைச் சார்ந்தொழுகும் நல்லமைச்சர் அல்லலுறுவதை வரலாற்று நூல்கள் வகுத்துரைக்கின்றன.

> " ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
> வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே "

என ஔவையார் கூறியது முற்றிலும் உண்மை. சோழன் சினத்தைக் கிண்டிவிட்ட தீத்தொழிலாளர் நலனுற்றனர். அவன் மயக்கத்தை மாற்ற முயன்ற பேரறிஞர் இன்னலுற்றனர். இதிலும் கொடுமை எங்கேனும் உண்டா ?

> " கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர் ;
> நல்லா அரசனில் காலன் மிகநல்லன்,
> கல்லா அரசன் அறம்ஓரான்; கொல்லென்பான்
> நல்லாரைக் காலன் நணுகநில் லானே "

எனக் கூறினர் திருமூலர். அவ்வுரையைப் பொய்ப்பித்துக்காட்ட முயன்றான் செங்கணன்.

பிறர்க்கென முயன்று தம் வாழ் நாளைக் கழிப்பர் பெரியோர். அக்காலை இன்னலுறினும் அன்னவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வர். சோழன் பேரமைச்

சரும் அத்தகையவரே. ‘அறம் வெல்லும்’ என்னும் உறுதி அவர் மனத்தே நிலைத்திருந்தது. சான்றோர்க்குக் கேடு சூழ்ந்த பழி சோழ மரபினரைச் சேரப்போகின்றதே என எண்ணிக் கவன்றார். ‘சோழன் குலவிச்சை கல்லாமற் பாகப்படும்’ என்ற முதுமொழி தன் காலத்தில் பொய்த்ததே என்று எண்ணித் தனக்குள்ளே அவர் வருந்தினார். தன் மன்னனுக்குக் கேடு நேரிடா வண்ணம் இறைவனை இறைஞ்சினார்.

**அமைச்சருக்கு அழைப்பு**

இந்நிலையில் இரண்டு ஏவலாட்கள் அரண்மனையிலிருந்து சிறைக்கூடத்துள் வந்து அவரை அரசன் அழைப்பதாகக் கூறினர். உண்மையை அறியாத அமைச்சர் சிறிது தயங்கினார். எனினும், மன்னன் ஆணையை மறுத்துரைப்பது யாங்ஙனம்? ஏவலாட்களுடன் அரண்மனையை நோக்கி நடந்தார்.

**அரசன் முறையீடு**

அமைச்சர் வருகையை எதிர் நோக்கிக்கொண்டிருந்த அரசன், அவர் வரக்கண்டதும் அரியணையிலிருந்து எழுந்து ஓடிவந்து, அவரைக் கட்டித் தழுவிக்கொண்டான். ‘அறியாது யான் செய்த தவற்றை மன்னிக்க வேண்டும்’, எனக் கூறிப் பணிவுடன் அவர்முன் கன்றெனநின்றான் அரசன்.

**அமைச்சர் மாற்றம்**

இவை யெல்லாம் அமைச்சருக்கு வியப்பை யுண்டு பண்ணின. எனினும் உண்மையை ஒருவாறு

உணர்ந்து, ‘ அரசே! ஆனைக்கும் அடிசறுக்கும் என்பர் ஆன்ருேர். இறைவன் ஒருவனே வழுக்கா நெறியோன்’ எனக் கூறிப் பொய்கையாரின் நிலை யாதாகிற்று என வினவினுர். அரசன் தான் சேரனை வென்று, பொய்கை யாரைச் சிறைப் பிடித்துத் தன் நாட்டகத்தே வைத் திருப்பதைத் தெரிவித்தான்.

கலைவாணர் சிறையில் வாடுகின்ருர் என்பதை அறிந்து அமைச்சர் மனம் நைந்தார். புலவரை உடனே விடுவிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். எனவே, “ அரசே ! புலவர் சிறையில் வாட யாம் இவண் இனிது வாழ்தல் எங்ஙனம் பொருந்தும் ? விடுதலை பெற்று, அவர் தஞ் செந்நாவால் வளவனை வாழ்த்தினு லன்றே, இக்கறை நீங்கும் !” எனக் கூறினுர். செங்கணுனும், தான் புல வரை உடனே சிறைவீடு செய்யப் போவதாகவும் அத ஞலேதான். அமைச்சரைச் சிறையிலிருந்து வெளிப் படுத்தி புள்ளதாகவுங் கூறினுன். அன்றியும், புலவரைச் சிறை மீட்கச் செல்லுங்கால் அமைச்சர் தன்னுடன் வர வேண்டுமென்றும் அரசன் வேண்டிக் கொண்டான். இவ் வுரை அமைச்சருக்குப் பெரு மகிழச்சியைப் பிறப்பித்தது. இருவரும் காலந் தாழ்த்தாது, சிறைக்கூடத்தை நாடிச் சென்றனர்.

**புலவர் வெற்றி**

செங்கணுன, தன் உரை கேட்டு மன மாறி விடுவான் என்று புலவர் திட்டமாக நம்பினுர். எனவே, அவனை நல்வழிப்படுத்தத் தனக்கு வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி உள்ளூற மகிழ்ந்தார். இறைவனை வாயார வாழ்த்தினுர். அவன் புகழைச் செந்தமிழப் பாக்களாற் பாடினுர்.

இந்நிலையிற் சோழன் அமைச்சருடன் சிறைக்கூடம் புகுந்தான். அவன் முகத்தில் அருள் பெருகிற்று. அதைக் கண்ட புலவர், முன்னிலும் பன்மடங்கு மகிழ்ந்தார். அரசன் விரைந்து சென்று பொய்கையாரின் திருவடிகளில் விழ்ந்து தன் பிழைகளைப் பொறுக்குமாறு வேண்டினன். புலவர், சிறிதுந் தாமதியாமல், அவனைத் தூக்கித் தழுவிக் கொண்டார். என்னே, புலவரது பெருந்தன்மை!

"நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீர்ஒழுகு சான்றோர் சினம்"

என்ற ஔவையாரின் நுண்ணறிவை என்னென்று கூறுவது!

**செங்கணனது வேண்டுகோள்**

புலவர் சான்றாண்மைக்கே எடுத்துக் காட்டாக விளங்கினர். அவர்முன் சோழன், 'களவுடம் படுனரிற் கவிழ்ந்து நிலங்கிளையா' நின்றான். அமைச்சர் அருகில் சுற்றாணை உணர்வற்று நின்றார். அம்மூவரிடை மௌனம் நிலவியது. இவ்வாறு சில விநாடிகள் கழிந்தன. புலவர் சோழனுக்கு முகமன் கூறுவாராயினர். ஆனால், சோழன் ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்தான். இறுதியில், புலவரின் அடிகளைத் தன் கரங்களாற் பற்றிக் கொண்டு, 'கலைக் களஞ்சியமே! தாங்கள் என்னை மன்னித்ததற்கு அத்தாட்சியாக என் புன்மதியை வியந்தாகிலும் சில பாக்களைப் பாடல் வேண்டும். புலவர் பாடும் புகழ் எமக்குக் கிட்டுமாறு செய்தல் வேண்டும்' எனக் கூறி வேண்டிக் கொண்டான்.

**களவழி பாடியது**

வளவன் வழிப்பட்டான். புலவர்தம், பொன்னுரை களுக்காக அவர் தாள்களைப் பிடித்து நின்றான் அவன். சான்றோர் புகழை அன்றே அவன் அறிந்தான். 'கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு' என்னும் மூதுரையின் கருத்தை உணர்ந்து நின்றான் அவன். அந்நிலையில் அவன் பொய்கையாரின் வாய்ச்சொற் பெறும் தகுதிபெற்று விளங்கினன். தீயன செய்த செங்கணனுக்கு நல்லன செய்யும் நாட்டமுடன் பொய்கையார் அவன் முன் நின்றார்.

> "இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கா
> லென்ன பயத்ததோ சால்பு"

என்னும் வள்ளுவன் மொழிக்கு அவர் இலக்காக விளங்கினர், எனவே, அவன் போர்ச் செயல்களைப் புகழ்ந்து பாட அவர் எண்ணினர். புறத்துறை யமைத்து அவன் களங்கொண்ட சிறப்பை நாற்பது பாக்களாற் பாடினர். அவற்றின் தொகுப்பே இன்று '**களவழி நாற்பது**' என்னும் பெயரால் வெளிப்பட்டுள்ளது என்பர்.

**மன்னன் மகிழ்ச்சி**

இன்னா செய்த தனக்கு இனியவே செய்த பொய்கையாரின் உயர் தனிக் குணங்களைச் செங்கணன் மனத்துள்ளே வியந்தான். அவர் தம் செந்தமிழ்ப் பாக்களின் சொற்சுவை, பொருட்சுவைகளை நுணுகிச் சீர்தூக்கிப் பார்த்தான் ஒருகணம் எவ்வாற்றானும் தகுதியற்ற தன்னைப் பாடித் தன் பெயரை அழியாது நிலைபெறச் செய்த சான்றவருக்குப் பரிசிலாகத் தன் நாட்டின் ஒரு பகுதியையேனும் கொடுத்தலே அமையும் என அவன் எண்ணி

ணன். எனவே, புலவரிடம் 'புலவர ஏறே! கொடுமை செய்த என்னைத் தம் திருவாயாற் புகழ்ந்து பாடி என் பெயரை அழியாது நிலைநிற்கச் செய்தீர்கள். வீட்டுலகத் துக்கு என்னை ஆட்படுத்திய செயலும் தங்களுடையது. தங்களுக்கு என் நாட்டின் ஒரு பகுதியைத் தருவதே பொருந்தும். எனவே, அதைப் பெற்று எம்மை மகிழ் வித்தருள்க' எனக் கூறி, அவர் முன் வணங்கி நின்றான்.

**பரிசில்**

பொன்னையும், பொருளையும் அவர் விரும்புவாரோ? முற்றுந் துறந்த பொய்கையார் அரியணைமீது அமர்ந்து ஆட்சி செய்ய ஒருப்படுவாரோ? சோழன் அளித்த அப் பரிசிலைச் சோழனுக்கே அளித்தார். தன் அன்பு மிக்க மாணவனை சேரமானை விடுவித்து அவன் நாட்டை அவ னுக்கே அளிக்கும் பரிசிலையே தாம் பெற விரும்புவதாகக் கூறினர்.

**சோழன் வியப்பு**

மாணவரது நல்வாழ்வுக்காகவே உயிர் வாழும் ஆசிரி யரும் உண்டு என்னும் உண்மை அன்றுதான் சோழனுக் குத் தெரிந்தது. புலவரின் அன்புடைமை அளவற்றது என்பதை எண்ணித் தனக்குள்ளே வியப்புற்றான். புலவ ரின் வழி நின்று அவர் ஆணைப்படி ஒழுகத் தான் சித்த முடன் இருப்பதாகத் தெரிவித்தான் செங்கணன். அமைச்சரும் புலவரும் பேருவகை யடைந்தனர்; அரச ன்து மனமாற்றத்தையும் அவன் கொடை நலத்தையும் எண்ணி, அவனைப் புகழ்ந்தனர். சேரமானை விடுவிக்கும் எண்ணத்துடன் மூவரும் சேரமானை நோக்கிச் சென்றனர்.

# 9. சிறையிற் சேரமான்

**பழமை நினைப்பு**

வானளாவிய மலைகள் நிறைந்தது சேரநாடு. எங்கும் கண்ணைக் கவரும் காட்சிகள். தொண்டிமா நகரில் அரண் மனை அமைந்திருந்த இடம் இங்குச் சிறப்பித்துக் கூறத் தக்கது. மலைக்காட்சியும், கடற் காட்சியும் ஒருங்கே கண்டு இன்புறும் வாய்ப்பு ஆண்டுறைந்தார்க்குக் கிட்டி யது. மாலைப் பொழுதில் குடதிசையிற்பகலவன் மறையுங் காட்சியும், கடல் மேல் படகுகளும் மரக்கலங்களும் ஊர்ந்து செல்லுங் காட்சியும் கண்டு களிக்கத்தக்கன. இவை இயற்கை வனப்புக்கள்.

கணைக்காலன் மனைவி கற்புக்கரசி; மலர்மகளன்ன எழில் நலம் பெற்றவள். தன் காதலனது உரை தவறு உத்தமி அவள். அவளுடன் கணைக்காலன் நடத்திய இல்லற வாழ்வு பிறருக்கு எடுத்துக் காட்டாய் அமைந் தது. 'மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்' எனப் புறத்தே கூறி மகிழ்ந்தார் பிசிராந்தையார்; அதை அகத்தே எண்ணி மகிழ்ந்தான் கணைக்காலன். அவன் வாழ்விற்கு அணிகலனெனப் புதல்வர் அவனுக்குத் தோன்றினர். குழலினும் இனிய அவர்தம் மழலைச் சொற் களால் அவன் மயங்கிச் செயல் மறந்து திளைத்திருத்தலும் உண்டு.

குடிகளிடம் அவன் கொண்டிருந்த அன்பை அளவிட்டுரைக்க முடியாது. அவர்களும், கணைக்கால னைத் தம் கருவிழியென மதித்தனர். தன்னுயிரினும் மன்னுயிரைப் பன்மடங்கு போற்றி வாழ்ந்தான் சேரமானும். இவற்றை யெல்லாம் இழந்து சோழன்

சிறைக்கூடத்தில் விழுந்து கிடக்கும் அவன் மனதில் இவை ஒன்றன் பின் ஒன்ருகத் தோன்றி மறைந்தன.

**சிறைக்காவலர் ஏளனம்**

ஆண்டான் அடிமை, என்னும் வேறுபாடு மக்களின் இயற்கைப் பண்பாட்டைக் கெடுத்துவிடுகின்றது என்பர் ஆன்ரேர். இஃது ஒருவாறு உண்மையே. நற்குணங்களால் நிறைந்து மக்களின் நல்வாழ்வைக் கருதிச் செங்கோல் செலுத்தும் மன்னரும் வாழ்ந்தனர். அவர் தம் குடையின் நிழலில் இன்புற்ற மக்கள் உலகின் மன்னரெல்லாம் இத்தண்ணளியுடன் விளங்குவர் என்று மனதில் எண்ணிக் கொண்டனர். அத்தகைய மக்களிடை அரசரை மதித்தொழுகும் எண்ணம் நிறைந்திருந்தது. தன் அரசரைப்போலவே பிற அரசருக்கும் மரியாதை செய்தனர். அரசரினம் மன்னுயிரைக் காவல் புரியும் உயர்குடி என்பதே அவர்கள் கொள்கை.

கொடுங்கோல் மன்னர் கீழ் வாழ்நர் மன்னரெல்லாம் மக்களினத்துச் சத்துரு என எண்ணுகின்றனர். வரி விதிப்பதும், கொடாரைத் துன்புறுத்துவதுமே அவர் செயலெனக் கருதுகின்றனர். இஃது உலக இயற்கை. இவ்வாறே சோணுட்டவர் அரசரினத்தின் மேல் வெறுப்புக் கொண்டவர். எனவே சிறையில் வாடிய சேரமானைக் கண்டதும் காவலருக்கு அவன் மேல் வெறுப்புத் தோன்றியது. தம் வாயில் வந்த வசை மொழிகளை யெல்லாம் கூறி அவனை நிந்தித்தனர். இவற்றையெல்லாம் கேட்டுக் கணைக்காலன் உள்ளூற வருந்தினுன்.

**தாகம்**

அரண்மனை வாழ்வை இழந்து சோழனது சிறைக் கூடத்தில், உணவும், நீருமின்றி, இரு தினங்களைக் கழித்தான் சேரமான். கவலையின் மிகுதியால் பசியின் கொடுமை அவனுக்குச் சற்று இலகுவாய்த் தோன்றிற்று. ஆனால் தாகம் அவனால் தாங்க முடியாதவாறு அதிகரித்தது. பகைவரிடம் இரந்துண்ணும் நிலை தனக்கேற்பட்டுள்ளதை யெண்ணி வருந்தினான்.

"ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்(கு)
இரவின் இளிவந்த தில்"

என்னும் திருமறை அவன் மனத்தில் உறுத்தியது. ஆவிற்கு நீர் வேண்டும் என யாசித்தலே இழிவெனின், உண்ண நீர் இரத்தல் எத்தகைய இழிவைப் பிறப்பிக்கும் என எண்ணி வாடினான். எனினும், தன் மனைவி மக்களை ஒருமுறை காணவும், சோழனுடன் மீண்டும் போரிட்டு இழந்த தன் நாட்டை மீட்கவும், புலவரின் சிறையிருப்பை நீக்கவும் வேண்டுமாயின் தன் உயிரைப் பாதுகாத்தல் வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தான். அதுவே தன் கடமை யெனவும் அவன் உணர்ந்தான்.

**காவலர் வாது**

தன்னை எள்ளி நகையாடிய அக்காவலரிடந் தன் கருத்தைத் தெரிவிக்கத் தயங்கினான் சேரமான். எனினும், கடமை பெரிது என்னும் எண்ணத்தால் தனக்கு நீர் கொடுத்துத் தன் தாகத்தைத் தணிக்குமாறு வேண்டினான்.

காவலரிருவருள் ஒருவன் சேரன்மீது இரக்கங் கொண்டான். இரு தினங்களாக உணவின்றி வாடும் சேரனுக்கு நீர் அளிப்பது அறச் செயலென அவன் எண்ணினன். எனவே, கலயமொன்றைக் கையிலெடுத்து நீர் கொணரப் புறப்பட்டான். மற்றவன் நேர்மாருன எண்ணங் கொண்டான். அரசரினமே மக்கட்டுத் துரோகஞ் செய்யுந் தன்மை வாய்ந்தது என்பது அவன் எண்ணம். அவர்க்கு நன்மை செய்தல் மனித இனத்திற்கே தீமை செய்வதாகும் என்பது அவன் கொள்கை. ஆகையால் சேரமானுக்கு நீர் கொடுப்பது தகுதியன்றெனக் கூறித் தன் நண்பனைத் தடுத்தான்.

**இயற்கைக் குணம்**

சிறைக்காவலர் இருவருள்ளும் எவ்வளவு வேறுபாடு! மனிதவர்க்கத்துக்குத் தோன்றும் பொது உணர்ச்சிகளில் எத்தனை வேற்றுமை! அனைவரும் மறப்பில் இறைவனிடம் அருள் பெற்று இம்மண்ணில் தம் வாழ்வை ஆரம்பிக்கின்றனர். அதனைப் போற்றி வளர்க்கின்றனர் மிகச் சிலர். அவ்வருளை விற்று மறத்துறையை மேற்கொள்ளுகின்றனர் மிகப் பலர். முதற் காவலன் அரசன் என்ற முறையிற் கணைக்காலனை மதியாது போயினும், அவன் ஒரு மனிதன் என்ற முறையில் அவனுக்கு ஏற்பட்ட துன்பத்தில் உதவ முயலுகின்ருன். இஃதன்றே இயற்கைக் குணம்! சோணுட்டில் நிகழ்ந்த முறைகேடுகளெவையும் அவன் இயல்பை மாற்றும் ஆற்றல் பெற்றில. எனவே, தன்னைத் தடுத்த தன் தோழனின் புன்மதியைக் கடிந்து கூறித் தண்ணீர் கொண்டுவரக் கடிதிற்

சென்றான். சிறிது நேரத்தில் ஒரு கலயத்தில் தண்ணீருடன் திரும்பி வந்தான்.

**மான உணர்ச்சி**

தாகத்தால் நா வறண்ட சேரமானிடம் தண்ணீரைக் கொடுத்தான் காவலன். ஆவல் மிக்கவனாகிக் கலயத்தைக் கையால் வாங்கினான். ஆனால் அவன் மனத்தே ஒரு போராட்டம் எழுந்தது. சேரர் குடியின் வீர வாழ்க்கையை ஒரு கணம் சிந்தித்தான். போரில் மடியா வீரரைத் தருப்பைப் புல்லின்மேற் கிடத்தி அவர் உடலத்தை வெட்டி வீரர் செலவுழிச் செல்கவென விடுக்கும் தம் முன்னோரின் வீர வாழ்க்கை அவன் மனத்தெழுந்தது. பிறந்த ஞான்றே குழந்தை யொன்று இறந்தாலும், அல்லது உருக்கொள்ளா ஊன்பிண்டமே பிறந்தாலும், அவற்றை வாளால் வெட்டி அடக்கஞ் செய்யும் பழங்கால முறை அவனுக்கு ஞாபகம் வந்தது. அத்தகைய வீர மரபில் உதித்த தன்னை ஒரு கணம் நோக்கினான். நாயைப் பிணித்திருப்பதுபோல் சோழன் அவனைப் பிணித்திருந்ததை எண்ணி, அவன் மனம் புண்பட்டது. தன் தாகத்தைத் தீர்க்கத் தன் பகைவனின் ஏவலாளர் அளித்த நீர் அவன் கையிலிருந்தது. அதை ஒரு விநாடி உற்று நோக்கினான். பகைவனை இரந்து தன் தாகத்தைத் தணித்து உயிர் வாழ்வது அவனுக்கு இழிவாகத் தோன்றிற்று. வசையில் வான் புகழுடன் விளங்கிய சேரர்தம் குடிக்கு அஃது இழுக்கென வெண்ணினான். இந்நிலையில் அவன் மனத்தில் தோன்றிய உணர்ச்சிகள் ஒரு செந்தமிழ்ப் பாவாக உருப்பெற்றன.

"குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்படு ஞமலியி னிடர்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே"

என்பதே அச்செய்யுள். 'மானமிழந்தபின் வாழாமை முன்னினிதே' என்ருர் ஓர் அறிஞர். மானத்தை இழந்து வாழக் கணைக்காலன் ஒருப்படுவானே? தன் கையிலிருந்த தண்ணீரை கீழே ஊற்றி[1] மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்.

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்"

என்ற வள்ளுவன் வாக்குக்கு இலக்காகத் தன் மானங் கெடுவதைவிடத் தன் உயிர் பிரிதலே மேலானதென்று கணைக்காலன் எண்ணினுன்.

---

[1] கணைக்காலன் பாடிய 'குழவி யிறப்பினும்' என்னும் புறப் பாட்டின் இறுதியில் காணப்படும் பாடினேர், பாடப் பட்டோரைக் குறிக்கும் பகுதியில் "சேரமான் கணைக்காலிரும்பொறை, சோழன் செங்கணுேடு திருப்போர்ப் புறத்துப் பொருது, பற்றுக் கோட் பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து, தண்ணீர் தாவென்று பெருது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து, உண்ணுன் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனல் களவழி பழைய உரையின் இறுதியில் பொய்கையார் சோழன் மேற் 'களவழி' பாடிச் சேரனை விடுவித்த தாகக் கூறப்படுகின்றது.

**சேரனைக் காணல்**

சிறை வீடு பெற்ற பொய்கையார் கணைக்காலனின் அறைக்குள் சோழனுடன் புகுந்தார். கணைக்காலன் மூர்ச்சித்துக் கிடந்ததைக் கண்ட புலவரது மனம் உடைந்தது. சோழன் புலவரினும் மிக்கு வருந்தினான். கணைக் காலனின் தலையைத் தன் மடியின் மீது தூக்கி வைத்துக் கொண்டு கூர்ந்து நோக்கினார் புலவர். அவன் உயிருடன் இருப்பதை அறிந்தார். எனவே, அவன் மூர்ச்சை தெளியுமாறு சில முறைகளைக் கையாண்டார். சிறிது பொழுதிற் சேரன் உணர்வு பெற்றான். பொய்கையார்

---

புறநானூற்றுப் பாடலின் அடிக்குறிப்பிற் கண்ட 'துஞ்சிய' என்னும் சொற்கு 'இறந்த' என்னும் பொருள் கொள்ளின் இவ் விரண்டு கூற்றுக்களும் முரண்படுகின்றன. மகா, மகோபாத்தி யாய டாக்டர் சாமிநாதையர் தாம் எழுதியுள்ள, 'சங்கத் தமிழும், பிற்காலத் தமிழும்' என்னும் நூலில் 'துஞ்சிய' என்ற சொல் 'இறந்த' என்ற பொருளையே மிகுதியும் தருவதாயினும் இங்கு 'மூர்ச்சித்த' என்று பொருள் கொள்ள வேண்டும் என்று கூறு கின்றார்.

கலிங்கத்துப் பரணியிற் காணப்படும்,

"களவழிக் கவிதை பொய்கையுரை செய்யவுதியன்
கால்வழித் தளையை வெட்டியா சிட்டவனும்"

என்னும் அடிகளும், விக்கிரம சோழனுலாவிற் காணப்படும்,

"மேதக்க பொய்கை கவிகண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்"

என்னும் அடிகளும் பொய்கையார் சேரனைச் சிறை மீட்டார் என்பதையே உறுதி செய்கின்றன. எனவே, நாமும் சேரன் மூர்ச்சித்து வீழ்ந்தான் எனவும், பொய்கையார் அவனைச் சிறை மீட்டார் எனவுங் கொண்டோம்.

அடைந்த மகிழ்ச்சியை என்னென் றியம்புவது! தன் வாழ்வில் தான் செய்து முடிக்க வேண்டிய, பெருங் கடனென்றைச் செய்து முடித்து விட்டதாக எண்ணி மகிழ்ந்தார். சோழனும் அளவிலா ஆனந்தங் கொண் டான்.

**சேரன் வியப்பு**

தன் ஆசிரியப் பெருந்தகை தன் அண்மையிற் புன் னகை தவழும் முகத்துடன் நிற்பதையும், தன் பகை மன்னனை சோழன் பணிவுடன் அவர் அருகில் நிற்பதை யுங் கண்ட சேரனுக்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை. தான் கண்டது கனவோ, நனவோ என்னும் ஐயம் அவ னுக்குப் பிறந்தது. இந்நிலையிற், புலவர், "வில்லவர் தோன்றலே! இச் சோழ மன்னன் நும்மைச் சிறை வீடு செய்யவும் சேர நாட்டை நுமக்கே திருப்பி யளிக்கவும் இவன் வந்துள்ளான்" என்றார். சோழனும் அவ்வேளை யில் தான் அறிவை இழந்து, அறநெறி பிழைத்துக் களங் கொண்ட செயலையும்; சிறையில் துன்புறுத்தின கொடு மையையும் மன்னிக்குமாறு வேண்டி நின்றான்.

சேரமான், 'எல்லாம் அவன் செயல், அவனே அனை வரது செயல்களையும் கவனித்துக் கொண்டிருக்கிறான். நும்பால் தவறு உண்டென்றால் அவன் நும்மை மன்னிப் பானாக' எனக் கூறிப் புன்னகை பூத்தான். 'நீர் கிழிய எய்த வடுப் போல' அவன் சினம் மாறிற்று. மூவருஞ் சிறையிலிருந்து ஒத்த உணர்ச்சியுடன் வெளிப்பட்டனர்.

**வியத்தகு வித்தை**

மூவரும் சோழன் அரண்மனையுட் புகுந்தனர். தான் அன்புடன் அளிக்கும் அமுதை உண்டு தன்னை மகிழ்விக்குமாறு வேண்டினன் சோழன். சிறிது நேரத்துக்கு முன் அவன் நாட்டு நீரையும் உண்ண ஒருப்படாச் சேரன், அவன் படைத்த அமுதைத் தன் ஆசிரியர் அருகில் அமர்ந்து உண்டான்.

என்னே அன்பின் செய்கை! கடும் பகையை நட்பாக மாற்றும் வித்தையைப் பொய்கையார் எங்குக் கற்ருரோ! சிறந்த குணநலம் பெற்ற இப் பொய்கையாரைத் தமராகக் கொண்ட கணைக்காலன் அரசியற் புலமைதான் என்னே!

> "அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
> பேணித் தமராக் கொளல்"

என்னும் வள்ளுவன் வகுத்த அரசியற் கொள்கையை அவன் யார் மூலம் கற்ருனே!

# 10. உறையூரில் இன்ப விழா

## பண்டை வழக்கு

பழங்காலத்தில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் சிறப்புடன் விளங்கின. ஒன்றன் உதவியின் றிப் பிற தனித்து நின்றில. காட்சி, கேள்வி என்னும் இரு புலன்களின் மூலம் மக்களுக்கு அறிவைப் புகட்டும் கருவியென அவை அமைந்து விளங்கின. கற்றல் எல்லாக் காலத்திலும், எல்லாருக்கும் சாலாது; அஃது எல்லோ ருக்கும் எளிதில் கைகூடும் பொருளும் அன்று. ஆனால் கேட்டல் பலராலும் அநுபவிக்கத் தக்கது. புலன்களை ஈர்க்கும் ஆற்றலையுடைமையின் பலரையும் ஆவலுடன் ஈடுபடச் செய்வதும் அதுவாகும். இக் கேள்வி இன்பம் இசைத் தமிழாலும் நாடகத் தமிழாலும் அனைவருக்கும் வழங்கப்பட்டது. உயரிய கருத்துக்களை நடித்துக் காட்ட வல்ல நடிகர்கள், இயற்றமிழ்ப் புலவரின் அறிவுறுத்தும் ஆற்றலினும் பன்மடங்கு ஆற்றல் பெற்றிருந்தனர். சீரிய வாழ்க்கை நிகழ்ச்சிகளை நாடக மேடையில் இயற்கை எழில் குன்றாது தோன்றுவித்தனர் பண்டையோர். இசை இன்பத்தால், துன்பம், துயரம், வறுமை, இழவு என் னும் குறைபாடுகளை மக்கள் மறந்து தம் பொழுதைப் போக்கினர். அன்னவர்தம் உள்ளம் பண்பாடடையவும் அது காரணமாக இருந்தது எனலாம். இசையின்பத்தை அநுபவிக்கும் சிறப்பியல்பு படைத்தவர் இழிதொழிலை யும் மறந்து நின்றனர், என்பர் நம் முன்னோர். அச் செயலை,

" ஆறலைக் கள்வர் படைவிட அருளின்
மாறுதலைப் பெயர்க்கும் மருவின்பாலை "

என்னும் பொருநராற்றுப்படை அடிகளால் அறியலாம்.

இவ்விசைத் தமிழின் பெருமைக்கும், நாடகத் தமிழின் சிறப்புக்கும் ஆதாரமாக நிற்பது இயல் தமிழ். இசை, நாடகத் தமிழுக்கு உடலாக நிற்பது இயற்றமிழ் எனலாம். எனவே, மூத்தமிழும், அன்று முற்றமெல்லாம் முழங்கின. அவை மூன்றுங் கூடி அரங்குகளில் ஆட்சி புரிந்தன.

வாழ்க்கையில் வெற்றி பெற்றோர் தமது வெற்றியைக் கொண்டாட இன்சுவை அடிசிலை, நெய்யுடனும் நிணக்குறைகளுடனும் அளித்து இன்புற்றனர். அதனுடன் முத்தமிழ் விருந்தையும் முறைப்படி அளித்தனர். கேட்டோர்ப் பிணிக்குந் தீந்தமிழின் சுவைகண்டார், வயிற்றுணவைச் செவியுணவினும் சிறப்பாகக் கொள்ளுவரோ? இதனாலன்றோ வள்ளுவர் செவிக்கு உணவு இல்லாத பொழுது நாவிற்குச் சுவை யுண்டுபண்ணும் உணவால் வயிற்றை நிரப்பும் வினையில் சான்றோர் ஈடுபடுவர் என்னுங் கருத்தை மனதில் இருத்தி,

" செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும் "

எனக் கூறியுள்ளார். இதுவே நம் பண்டையோர் கண்ட இன்ப வாழ்வு.

**செங்கணானின் எண்ணம்**

ஆணவத்தால் ஆகாதன செய்து, புலன்வல்ல பொய்கையாரின் அமைதியான வாழ்வில், சில துன்ப

அலைகள் புரண்டோடக் காரணமாக இருந்த தன் தீச் செயல் செங்கணானின் மனதை விட்டு மறைந்த பாடில்லை. அன்பின் வழி அருளைப் பெற்று இன்பவாழ்வு வாழ்ந்த கணைக்காலன் தன் காதலியைப் பிரிந்து, மக்கள் மழலைச் சொற்களை மறந்து, தன் மதியை இழந்து, மானத்தால் உந்தப்பட்டுச் சிறைக்கூடத்தில் அவலமுற்ற காட்சி அவன் மனக்கண்ணை விட்டகலாது நின்றது. ' தான் கெடினும் தக்கார் கேடெண்ணற்க' வென்னும் திரு மறைக் கூற்றுக்கு முரணிச்செய்த தன் தீச் செயலுக்குக் கழுவாய் ஒன்று அவசியம் என்பது அவன் மனதில் தோன்றியது. என் செய்வான் சோழன்? மறந்தும் புறத்தார்க்குக் கேடு சூழாப் பொய்கையாரிடம் தான் இனி நடந்துகொள்ளும் முறை யாது என அவனுக்குப் புலப்படவில்லை. எனினும், விழாவொன்று நிகழ்த்தி அவர் மனம் மக்களின் ஆடல், பாடல் ஆகிய செயல்களைக் கண்டு, இன்புற்றால், அஃது ஒருவாறு தன் குற்றத்துக் குக் கழுவாயாகும் என எண்ணினான். இதுவே தக்க முறையெனத் துணிந்து தன் நாட்டகத்தே வாழ்ந்த, ஆடல் பாடல் வல்லாரனைவரையும் உறந்தையம்பதியிற் கூடுமாறு முரசறைவித்தான். அவ்வாறே கலைவல்லா ரனைவரும் ஒருங்கே கூடினர்.

**இன்சுவை அடிசில்**

உலகு, நாவுணர்வின் மாக்களாலே மிக்கு விளங்கு வது. சிலரே செவியுணர்வில் சிறப்பின்பங் கண்டு அதனைத் தொடர்ந்து பெறும் ஆர்வத்துடன் விளங்கு கின்றனர். " உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே"

என்பர் இலக்கண நூலோர். எனினும், அஃது உயர்ந்தோரால் நிறைந்து விளங்குவதில்லை. அனைவருக்கும் ஒருங்கே அளிக்கத்தக்க விருந்து நல்லுணவேயாகும். இவ்வுணவைக் கற்றோரும், மற்றோரும் ஏற்றத் தாழ்வின்றி ஒருங்கிருந்து உண்பாரன்றோ!

அனைவரையும் கூடி உண்டு மகிழச் செய்வதே தன் விழாவின் முதற் செயலெனக் கொண்டான், செங்கணான். 'சோழ நாடு சோறுடைத்து' என்பது ஔவையார் வாக்கு. அங்குச் சோற்றுக்குப் பஞ்சம் இல்லை. இன்மையால் மக்கள் செங்கணனது அரண்மனை முன் கூடி உணவை எதிர்நோக்கி நின்றிலர். அரசன் அளிக்கும் விருந்து பெறங்கரிய பேறுகளிலொன்றன்றோ! இதுவே அங்குப் பெருங்கூட்டம் கூடியதற்குக் காரணம். தெருவெல்லாம் அழகுற அமைந்த பந்தர்கள், கதிரவன் வெங்கதிரைத் தடுத்துத் தண்ணிழல் பயந்தன. அந்நிழலில் ஆடவர், பெண்டிர், சிறியோர், பெரியோர், கற்றோர், மற்றோர், சேனாவீரர், அரசியர் சுற்றத்தார், இசை நூல் வல்லோர், நடிப்பு வல்லோர் முதலிய பல்வகை மக்கள் பந்தி பந்தியாக அமர்ந்தனர்.

அடுதல் அறியா ஆடற் பெண்டிரும், சோற்றை இலைகளில் இடுதல் அறியா இசை வல்மகளிரும் அகப்பை ஏந்தி அணிஅணியாக அன்ன மீந்த காட்சி கண்டு இன்புறற்பாலது. ஆடவர், பெண்டிர் என்னும் வேறுபாடின்றி மடைத்தொழிலை விரைந்து செய்தனர். உண்ட மக்களுக்குத் தாம்பூலம் அளிக்கும் செயலை அரண்மனை வாழ்க்

கையை யன்றிப் பிற வாழ்க்கையை அறியா அந்தப்புறப் பெண்டிர் குறைவின்றிச் செய்து முடித்தனர்.

மக்களனைவரும் உண்டனர். பொய்கையாரும் தன் மாணவனான கணைக்காலன் ஒரு பக்கத்தே இருந்து உண்ண, சோழனும், சோழன் மாதேவியும் மறுபக்கத்தே இன்முகத்துடன் அமர்ந்து இன்சொற் பல கூற, இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்து உண்டு முடித்தார்.

சிறையில் சோழ நாட்டின் நன்னீரும், உண்ண மன மின்றி வாடிய கணைக்காலன், அவன் அளித்த உணவை வயிறார உண்டு மகிழ்ந்தான். அன்பால் கொடுப்பது நஞ்செனினும் அதை அமுதமென உண்பதன்றோ உயரிய பண்பாடாகும். இதுவன்றோ தமிழகத்தில் நிலவிய நாகரிகம்.

> "பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்"

என்ற வள்ளுவன் குறளுக்கு ஒப்பெனக் கூறவல்ல செந்நெறி பிறிதுள்ளதோ?

அன்று பகற்பொழுது பலரும் உண்டு மகிழ்வதிலேயே கழிந்தது. கதிரவன் வெம்மை உறந்தை மக்களை ஒன்றுஞ் செய்திலது. தன் ஆட்சியை முடித்து அவனும் மேற்றிசையிற் சென்று வீழ்ந்தான். தண் கதிரால் உலகை உவக்கச் செய்யும் சந்திரன் கீழ்த்திசையில் தன் பூரண வடிவிற் காட்சியளித்தான்.

**நாடக மேடை**

முத்தமிழிலும் சிறப்பியல்பு படைத்தது நாடகத் தமிழ் எனலாகும். இயல், இசை, நாடகம் என வரிசைப்

படுத்தும் முறையிலிருந்து இதனை ஒருவாறு உணரலாம். இயல், இசைத் தமிழ்களின் முதிர்ந்த நிலை அது. இன்று அச் சிறந்த கலை இழிசினர் கையில் அமைந்துள்ளது. அரண்மனை ஆடரங்கில் நடிப்பைக் கண்டனர் நம் முன்னோர்; தெருவில் கலையுணர்வில்லார் நடிக்கும் கூத்தைக் கண்டு அதுதான் நமது முத்தமிழிற் சிறந்து விளங்கிய ஒரு தனித் தமிழ் நாடகமோ வென ஐயுற்றுக் காண்டல் அளவையால், பண்டைக் கலைக்கு இன்று தாழ்ந்த மதிப்பிடுவோர் பலர். இவையெல்லாம் காலக்கேடு. ஐம்பொறிகளும் புலன்வழிச் செல்லாது கட்டுப்படுத்தப் படுதலே சிறந்த நெறி எனச் சமயச்சான்றோர் எண்ணியதின் விளைவே இஃது எனலாம். புலன்களை நன்முறையில் பொறிவழிச் செலுத்தி ஐம்புல இன்பமும் காண்டல் அறிவிடைமை என்பது பழங்காலக் கொள்கை. இடைக் காலத்தே எழுந்த இத்தவறான கொள்கைகள் நம் இசை, நாடகக் கலைகளை அழித்தன. தப்பிய சில, இன்று தலை தூக்குகின்றன. நாடகக் கலை தன் எழிலை அறவே இழந்தது எனக் கூறினும் மிகையாகாது. யாழ் நூல் யாத்த விபுலானந்த அடிகளும், கருணாமிர்த சாகரமியற்றி உலகுக்கு இசையமுதூட்டிய ஆபிரகாம் பண்டிதரும் இழந்த இசையை மீண்டும் நாம் பெறத் தூண்டுகோல்களாய் அமைந்தனர். எனினும் நாடகம் தனி சிறப்படைந்திலது. முற்றும் அறிவிக்கும் நாடக நூல்களும் கிடைத்தில. தமிழன் இழந்த பண்டை நலன்களில் இது மிகவும் முக்கியமானது. எனினும், சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் ஒருவாறு நாடக இயலை அறிவுறுத்துகின்றன.

கல்தெரி கழகங்கள் பல அக்காலத்தில் அமைந் திருந்தன. அவற்றுள் நாடகமேடை சிறப்புடையது. இதனை ஆடரங்கு என்றனர். இது விதானித்துக் கட்டப்பட்டதாகவும், பல திரைகள் இயற்கைக் காட்சி களைத் தோற்றுவிக்கும் தன்மையுடன் அமைந்தன வாகவும் விளங்கிற்று. ஆடும் மகளிர்க்கு உரிய இடம், இசை கூட்டுவோரின் இருக்கைக்கு அண்மையில் அமைந்திருந்தது. அரசனும், அரசியுற் சுற்றமும் இருந்து நாடகக் கலையின் இன்பம் நுகர அவர்க்கெனத் தனி இருக்கைகள் அமைந்திருந்தன. ஆடவர், பெண் டிர்க்கெனத் தனித்தனியே அமைந்துள்ள இடங்களில அமர்ந்து அன்னவர் கண்டு கேட்டு மகிழ்ந்தனர். இஃது அக்கால ஆடரங்கின் தோற்றம்.

ஆடல் மகளிர் அரசனுல் ஆதரிக்கப்பட்டனர். சோழ நாட்டில் ஆட்டம் வல்ல மகளிர் பலர் பழங் காலத்தில் வாழ்ந்தனர். கோவலனின் உள்ளத்தை ஆட்டத்தாற் கொள்ளை கொண்ட மாதவி சோழ நாட்டவளன்றே! ஆடற் சிறப்பு அந்நாட்டவரது சிறப்பியல்பு போலும். செங்கணனும் ஆடல்வல்ல மகளொருத்தியின் நாட்டியக் கலைத்தேர்ச்சியை அரங் கேற்றச் செய்வதின் மூலம் பொய்கையாரையும், பிறரை யும் மகிழ்விக்க எண்ணினன். மன்னன் நினைக்கின் ஆகாததுண்டோ?

**நடனம்**

ஆடலில் வல்ல பெண் ஒருத்தி நாடகமேடையிற் காட்சி அளித்தாள். அவள் பன்னீராட்டைப் பிராயத் தினள்; அழகே உருவெடுத்தாலன்ன மேனியள்.

அவள் அருகே ஆடலாசான், இசையாசிரியன், இயற்றமிழ் புலவர், தண்ணுமை முதலோன், குழலோன், யாழாசிரியன் முதலியோர் தனித்தனி இருக்கையில் இருந்தனர். இசைக் கருவிகளெல்லாம் கூடி நின்று இசைத்தன.

அரங்கில் தோன்றிய அவ்விள மகள், மயில் தன் தோகையுடன் ஆடுவதே போல் அணிகலன் பல ஒலிக்க அகக்கூத்து, புறக்கூத்துக்களை முறை தவறாது தோற்றுவித்து ஆடலைத் தொடங்கினாள்; கண் சுழல, முகம் அகக் குறிப்பை அறிவுறுக்க, கையை நீட்டியும், மடக்கியும், தாளந் தவறாது கால் பிரித்து ஆடியும் கண்டோரை மகிழ்வித்தாள். அனைவரும் அவள் நடிப்பில் ஈடுபட்டிருந்தனர். காலம் கடிதிற் கழிந்தது.

அன்றிரவின் முதற்சாமம் நாடகத்தாற் கழிந்தது. பொய்கையாரும் கணைக்காலனும் சோழனது அன்பின் விருந்தை நுகர்ந்து சோழனது அன்பின் செயலால், தாமடைந்த துன்பத்தை மறந்து நின்றனர். அந்நிலையில் சோழன் தன் நாட்டவருக்குப் பொய்கையாரின் புகழை விரித்துரைக்க முற்பட்டான்.

**சோழன் விரிவுரை**

ஆடல் முடிந்த பின்னரும் உறந்தையோர் மண்டபத்தின் கீழ் அமர்ந்திருந்தனர். தம்மன்னன் வாய்மொழி கேட்டின்புறுவதே பிற இன்பங்களினும் சிறந்த தென்பது அவர் எண்ணம் போலும். சோழனும் தன் ஆசனத்தினின்றிறங்கி அரங்க மேடை மீதேறினான். மக்களனைவரும் இமை கொட்டாது அவனை நோக்கிக் கொண்டிருந்தனர். அவன் சேரனுடன் அடைந்த வெற்றியைத் தன்

மக்களுக்குக் கூறி அவர்களை மகிழ்விக்க நினைத்தானென ஒரு சிலர் எண்ணியிருக்கலாம். எனினும், பொய்கையாரின் புகழை வாயாரக் கூறி, அவரை வாழ்த்தவே அன்று மேடைமீது தோன்றினான் என்பது பலருக்குத் தெரியும்.

எழுந்த அரசன் பொய்கையாரை வணங்கினான். அவர் ஆசிபெற நிற்பவன்போல் சில விநாடிகள் அவர் முன் அசைவற்று நின்றான். பின்னர், சற்றுத் தாழ்ந்த குரலில் தன் முன்னோரின் வீரச் செயல்களையும், கொடைச் செயல்களையும் விரித்துரைத்தான். புலவருடன் அவர்கள் கொண்டிருந்த நட்பை அழகுபடக் கூறினான். பிசிராந்தையாருடன் நட்புக் கொண்டிருந்த கோப்பெருஞ் சோழனின் சிறப்பியல்பைக் கூறித் தன் குடிப் பெருமையைப் புலப்படுத்தினான். பின்னர், தன் இளமை வாழ்க்கையை எடுத்துக் கூறினான். புலவர் பலர் தன் அவையில் வாழ்ந்தனரேனும், அவரை நன்கு மதித்தொழுகாத் தன் சின்மதியை இழித்துக் கூறினான்.

பின்னர், பொய்கையாரின் புலமையை அறியாது அவரை ஒரு சாதாரண மனிதரென எண்ணி, அவரைத் தன் அவைக்கழைத்து அவமதிப்புடன் நடத்த எண்ணிய தீச்செயலைக் கண் கலங்கக் கூறினான். இறுதியில், தமிழ் அன்னையின் தவப்புதல்வரான பொய்கையாரைச் சிறையிலிட்டுத் தன் குடிக்கு இழுக்கை யுண்டு பண்ணியதைக் கூறிக்கொண்டே பொய்கையாரின் இருதாளிணைகளையுந் தன் கரங்களாற் பற்றிக்கொண்டு, "எந்தாய்! என் புன்மதியைப் போக்கிய புலவர் ஏறே" எனக் கூறினான், சோழ வளநாட்டு மன்னன்.

## பொய்கையாரின் ஆசி மொழிகள்

தன் தாளிணைகளைக் கரங்களால் பற்றி நிற்பவன் மனுவழித் தோன்றிய மன்னன்; செங்கோல் வழுவா நெறிமுறை நிற்கும் உயர்தனிக் குடிப் பிறந்தவன் என்னும் சிந்தை புலவர் உள்ளத்தே புகுந்தது. அவன் செய்த தவறு அவன் குடிப் பெருமைக்கு இழுக்கெனத் தோன்றினும், புன் மதியை வென்ற பேறு அவன் குடியில் அவனுக்கே, கிட்டிய தென்பதை அகத்தே எண்ணி, 'அரசே, நீவிர் நெறி தவறாக் குடிப் பிறந்தீர்.' நும் முந்தையோ ரெல்லாம் நெறி தவறாது வாழ்ந்தனர். எனினும், நும் செயல் அவரது செயலினும் புகழ் மிக்கது. அறநெறியே செல்வோர் அந்நெறியில் நிற்பது எளிது. மற நெறியே சென்றவர் மறத்துறையைக் கைவிட்டு அறத்துறையைக் கடைப் பிடித்தல் அரிய செயல் ஆகும். 'செயற்கரிய செய்வார் பெரியோர்' என்றார் வள்ளுவரும் அவ்வரிய செயலைச் செய்த பேறு நுமக் கன்றி நும் முன்னோரெவர்க்குக் கிட்டியது? எனவே 'அரசே நும் அறநெறியாற் பொருள் கூட்டி, இன்பம் பெருக்கி, வீட்டு வாழ்வை யடையும் செயலையே நீவிர் சிந்தித் தொழுகுதல் சிறப்புடையது. அன்றி, நுமக்குப் புகழைக் கொணர்ந்த நும் தவற்றை எண்ணிப் புண் படுவது பொருந்துஞ் செயலன்று' எனக் கூறினார்.

பொய்கையாரின் நல்லுரை கேட்ட மாந்தரனை வரும் அவரது தூய நெறியை மனத்தே புகழ்ந்து, அரசனை வாழ்த்தித் தத்தம் இல்லஞ் சேர்ந்தனர். செங் கணானும் பொங்கி எழும் உவகையோடு புலவருடன் கணைக்காலனையும் தன் அரண்மனையில் அன்றிரவைக் கழிக்கச் செய்தான்.

**சிவிகைச் செலவு**

மறுநாட் காலையில், புலவரையும் கணைக்காலனையும் சேர நாட்டிற்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புலவர் பெருமானைத் தனியே ஒரு சிவிகையிலேற்றி உறையூரை வலம் வரச் செய்தான். அவ்வூரில் வாழ்ந்த சான்றவர் பலரும் பற்பல பொருள்களைப் புலவருக்குப் பாத காணிக்கையாக அளித்தனர். கணைக்காலன் வீற்றிருந்த சிவிகை புலவரைத் தொடர்ந்து சென்றது. அதன் பின்னர் நால்வகைப் படைகளும் அணியணியாகத் தொடர்ந்து சென்றன. புலவரது சிவிகை மறையும் மட்டும் செக்கணன் கூர்ந்து நோக்கிக்கொண்டே நின்றான். புலவரும் மேற்றிசையில் மறைந்தார்.

சிறைப் பிடிக்கப்பட்டுச் சோழநாடு சென்ற பொய்கையார், அரசருக்குரிய சிறப்புடன் மலைநாடடைந்தார். 'கற்றோருக்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பு' என்னும் முதுமொழி பொய்யாகாதன்றோ !

**பிரிவுத் துன்பம்**

நடந்தவை செங்கணனுக்குக் கனவெனத் தோன்றின. பொய்கையாரின் தூய சிந்தைகளும், உயரிய கொள்கைகளும் அவன் மனத்தை விட்டகலாது நின்றன. இராசமாதேவியும் தம் வாழ்வில் விளக்கேற்றி வைத்த அப்புலவர் மணியைப் பலவாறு புகழ்ந்து கூறினாள். சிறிது காலம் தம்முடன் தங்கினும் பிரிவால் பெரிதும் வாட்டமுறச் செய்த புலவரது அன்பையும் அருளையும் எண்ணினர். எதிர் காலத்தில் தம் வாழ்க்கையை எவ்வாறு மாற்றியமைப்பதெனுந் திட்டங்கள் பல வகுத்தனர்.

# 11. இறுதி நாட்கள்

**சேர சோழ நட்பு**

மலை நாடடைந்த கணைக்காலன், நிலை குலைந்து நின்ற, தன் நாட்டை ஒழுங்கு படுத்தினன்; வாணிபம், சிற்பம், கணிதம் இசை, நாட்டியம் போன்ற துறைகளைப் பல வாறு முயன்று உயர்நிலைப் படுத்தினன். பொய்கை யாரும் பிற புலவரும் தமிழ் மொழியின் வளத்தைப் பெருக்கினர். போர்ப் பயம் நீங்கி மக்கள் வாழ்ந்தனர். சேரனும் சோழனும் பெரிதும் நண்பர்களாயினர். தமிழ் நாட்டின் புகழை வளர்ப்பதில் இருவரும் ஒத்துழைத்த னர். தமிழகம் இழந்த புகழை மீண்டும் பெற்றது.

**செங்கணன் கண்ட செந்நெறி**

பொய்கையாரின் நல்லொழுக்கங்கள் செங்கணனை நன்னிலைக்கண் நிறுத்தின.

> " நல்லாரைக் காண்பதும் நன்றே நலமிக்க
> நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே "

என்னும் ஆன்றோர் வாக்குப்படி பொய்கையாரைக் கண்ட துய், அவர் உரை கேட்டதும் அவனுக்கு உறுதிப் பொரு ளைக் கைகூடச் செய்தன.

தன் வாழ்வின் இறுதி நாட்களில் அவன் அளவில் லாச் சிவ பக்தியுடன் விளங்கினன் என்றும், சைவப் பணி கள் செய்வதிலேயே தன் நாட்களைச் செலவிட்டான் என வும், பக்தி மேலீட்டால், ஈசற்கு எழில் மாடம் எழுப தமைத்தான் எனவும் தேவாரப் பதிகங்கள் மூலம் அறி

யப்படுகின்றன. இச்செங்கணன் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர் எனச் சிவனடியார் கூறுகின்றனர். சோழவரசனான செங்கணன் சிவனடியாராகிச் சிவத் தொண்டராய்ச் சிவனடி சேர்ந்தார்.

**கணைக்காலன் மறைவு**

தன் வாழ்நாளைச் சேரனது நாட்டில் கழிப்பதென உறுதி செய்தவாறே, அவனைப் பலவாறு புகழ்ந்து பாடி அவன் அவையில் தலைமையாக வீற்றிருந்து அதனை அலங்கரித்தார் பொய்கையார். தொண்டி அக்காலத்தில், பல்கலை பயிலும் கலைக் கூடமாக விளங்கியது. தம்மிற் பெரிய பொய்கையாரைத் தமராகக் கொண்டொழுகிய கணைக்காலன் எல்லா வலிமையும் பெற்றுத் திகழ்ந்தான். 'மன்றில் முது மக்கள் வாழும் பதியினிதே' என்றார் பூதஞ் சேந்தனார். அவ்வாறே தொண்டிமாநகர், ஆண்டுறைந்த மக்களுக்கு இன்பத்துக்கு உறைவிடமாக விளங்கிற்று.

உலகில் நன்றென்றுந் தீதென்றும் பாராது தன் முன் நேர்ந்ததெல்லாம் துடைத்து முடிப்பவன் கூற்றுவனே யாவான். இளைஞர், முதியவர், அறிஞர், அறிவிலி, ஏழை, தனவந்தன் என்னும் வேறுபாடு அவனிடம் இல்லை. கணைக்காலனுக்கும் பொய்கையாருக்கும் இடையே ஏற்பட்டிருந்த அன்புப் பெருக்கையும் அவன் நோக்கவில்லை. அவ்விருவரையும் பிரிக்கும் எண்ணம் அவன் உள்ளத்தே உதித்தது. மனம்போனவாறே வாழ்க்கை நடத்தும் அக்காலன் ஒருநாள் திடீரெனக் கணைக்காலனின் உயிரைக் கவர்ந்து சென்றான்.

சேரன் பிரிவை யெண்ணிப் பொய்கையார் பட்ட துயருக்கு அளவில்லை. 'என்னை ஆதரித்த வள்ளலே! நான் வடநாடு புறப்பட்டகாலை என் உடன் புறப்பட்ட உத்தம! உன் அவையிலேயே யான் வாழவேண்டுமென என்னிடம் உறுதிமொழி பெற்ற உண்மை அன்ப! என்னை இவண் விட்டு நீ தனியே சென்ற காரணம் யாதோ? நரைத்துத் திரைத்த நானிருக்க மூப்பறியா உன்னைக் காலன் அழைத்துச் செல்லத் துணிந்தானோ?' என்று பலவாறு கூறிப் புலம்பினர்.

**சேரமான் கோக்கோதை மார்பன்**

கணைக்காலன் உயிர் நீத்த பின் அவன் தாயத்தானை சேரமான் கோக்கோதை மார்பன் அரியணை யேறினன். அவனும் கணைக்காலனைப் போலவே பொய்கையாரை அன்புடன் ஆதரித்தான். தமிழ் மொழிக்குப் பல தொண்டுகள் செய்தான்.

**புலவர்தம் செய்யுட்கள்**

கோக்கோதை மார்பனின் கொடைத் தொழில் இங்குக் குறிப்பிடத் தக்கது. அவன் கொடை வன்மையை அறியாது வறுமையுற்ற இரவலன் ஒருவனைப் பொய்கையார் அவனிடம் ஆற்றுப் படுத்துகின்றார். அச் செய்யுளில் தொண்டித் துறையைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். கோதை அணியும் மலர்களிலிருந்து ஒழுகும் தேனும், அவன் காதலி அணியும் மாலைகளிலிருந்து ஒருகும் தேனும் கருங் கழிகளிற் பூத்திருக்கும் பூக்களின் தேனும், தொண்டித் துறையையே தேன்மயமாக்கினது என்கிறார். அதோடு அமையாது, அத்தொண்டித்

துறையைத் தன் ஊர் என கூறுவதிலும், கோக்கோதை மார்பனைத் தன் மன்னன் எனக் கூறுவதிலும் அவருக்கு உள்ள ஆர்வந்தான் என்னே!

"கோதை மார்பிற் கோதை யானும்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்
மாக்கழி மலர்ந்த நெய்த லானும்
கள்நா றும்மே கானலந் தொண்டி,
அஃதெம் மூரே, அவனெம் மிறையே"

(புறம் 48.)

என்னும் அடிகளே அச்செய்யுளின் முற்பகுதி.

வேறொரு சமயம் புலவர் சேரநாட்டின் வளத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார். சேரநாடு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானில வளமும் ஒருங்கே அமைந்தது என்பதை அழகுற அமைக்கின்றார். இந் நானிலத் தலைவனை சேரனை எந்நிலத் தலைவன் எனச் சுட்டிக் கூறி வாழ்த்துவதென்று அவருக்குப் புலப்பட வில்லை. அவன் நாட்டில் குறிஞ்சிப் புனத்தே கிளி கடியு மாறு விட்ட கவண்கல், வயல் வெளிகளிலும் நெய்தல் நிலத்திலும் உள்ள புட்களை ஒருங்கே எழச்செய்யும் என் கின்றார். இயற்கைக் காட்சியைச் சித்திரித்துக் காட்ட வல்ல அச்செய்யுள் வருமாறு:

"நாட னென்கோ ஊர னென்கோ
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்ப னென்கோ
யாங்கன் மொழிகோ வோங்குவாட் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பி னயல
திறங்குகதி ரலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே"

(புறம் 49.)

**முடிவு**

இவ்வாறு சொல் வளமும், பொருள் வளமுஞ் செறிந்த செய்யுட்கள் பல இயற்றித் தமிழன்னையின், திருப்பணியாளராய் வாழ்ந்த பொய்கையார் தொண்டியம் பதியிலேயே தம் முதிர் வயதில் இன்னுயிர் துறந்தார்.

---

# பயிற்சிகள்

1. கீழ்க்கண்ட தலைப்புக்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் ஒவ்வொரு கட்டுரை வரைந்து பழகுக.

    1. பொய்கையாரின் பிறப்பு
    2. ,, கல்வி
    3. வெற்றி விழா
    4. உண்மை வெற்றி
    5. சோழனது நிருபம் விளைத்த குழப்பம்
    6. பழங்காலப் போர் முறை
    7. செங்கணனது மனக் குழப்பம்

2. கீழ்கண்டவர்களைப் பற்றி இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை வரைக.

    1. பொய்கையார்
    2. சேரமான் கணைக்காலிரும் பொறை
    3. செங்கணன்
    4. இராசமாதேவி
    5. சோழனின் அமைச்சர்
    6. சோழன் அவைப்புலவர்
    7. சிறைக் காவலர்

3. கீழ்க்கண்ட தலைப்புக்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் ஒவ்வொரு கட்டுரை வரைக.

1. சேரர் புகழ்
2. சோழர் புகழ்
3. சோழ வள நாடு
4. சிறையிற் பொய்கையார்
5. சிறையிற் சேரமான
6. புலவரின் இறுதி நாட்கள்
7. பொய்கையாரது கவி நலம்

4. கீழ்க்கண்டவற்றைப் பற்றி இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை வரைக.

1. பழங்காலத்தில் இன்ப விழாக் கொண்டாடும் முறை
2. முத்தமிழ்
3. நாடகக் கலை
4. சோழனது அடிசில் விருந்து
5. சோழனது விரிவுரை
6. பொய்கையாரின் ஆசி மொழிகள்
7. 'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பு'

164396
O-7/1 PLW
NSS
600 009